செந்தமிழ் 1922-23

[illegible] 13 [illegible]


[illegible]
R[illegible]11, N11[illegible] :
N23·13·7
186726

1217

ரெஜிஸ்தர் எம். 916.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்
வேதாந்த விசாரம் செய்யும்
ஓர் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை.

9 JUN 1923

நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.,
பத்திராதிபர்.
ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யதர்சி.

ஸபையின் 1922—1923ஸ்ரீ சித்திரைமீ.

ஸம்புடம் 13.] ருதிரோத்காரிஸ்ரீ சித்திரைமீ [ஸஞ்சிகை 7

1. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 219
2. தேவாலய மடமசோதா சட்டத்தின் முடிவு.
தி. த. ரங்காசார்யர். ... 225
3. மனுஸ்மிருதி.
புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர். ... 234
4. ஸம்வர்க்க வித்யையின் கதை.
வெ. அநந்தாசார்யர். ... 243
5. யாகம்.
டி. ராமஸ்வாமி அய்யங்கார். ... 218
6. வால்மீகியும் கம்பரும்.
ஆர். ஸ்ரீநிவாஸராகவாசார்யர். 247
7. சில சிலாசாஸனங்கள்.
8. ஸ்ரீ அஹோபிலமடம் (பத்ராதிபர்) 253
9. ஸ்ரீவிசிஷ்டாத்வைத தத்வம். ஸ்ரீசைலசக்ரவர்த்தி ... 25

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஸியால்
ப்ரசுரம் செய்யப்பட்டது.

மதராஸ்: கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

வர்ஷச்சந்தா ரு. 3—0—0] [ஸஞ்சிகை 1 அணா 4.

## ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை சேலம்.

சேலத்திலிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் 1923ஸு பிப்ரபரிமீ 18உ ஞாயிற்றுக்கிழமை ஸௌந்தரராஜப்பெருமாள் கோவிலில் ஒன்று சேர்ந்து கூடி ஒரு ஸபையை ஏற்படுத்திக்கொண்டார்கள். அங்கத்தினர்கள் பின்வருமாறு ஆலோசித்து நியமிக்கப்பட்டார்கள்.

**போஷகர்கள்.**

ஸ்ரீ. உப. A. V. கோபாலாசாரியர், M. A., B. L. ஹைகோர்ட்டு வக்கில் [திருச்சி,
,, V. V. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், B. A., B. L. சென்னை.
,, கோகுலம் C. R. வீரராகவாசார்யர் வக்கீல், செவ்வாபேட்டை.
ஸ்ரீமான். நாராயணஸாமி முதலியார், செவ்வாபெட்டை.
,, R. V. ஸுப்ரமணியசெட்டியார், சேலம்.

**ஸபாத்யக்ஷர்.**

ஸ்ரீ. உப. M. நரஸிம்மய்யங்கார் வக்கீல், செவ்வாப்பேட்டை.

**ஸபாத்யக்ஷ பிரதிநிதிகள்.**

,, P. தேசிகாசார்யர் வக்கீல், சேலம்.
,, C. S. தேசிகாசார்யர் டிஸ்திரிக்ட்கோர்ட்டு, சேலம்.
ஸ்ரீமான். D. P. சென்னகிருஷ்ணசெட்டியர்ர் சாவகார், சேலம்.

**கார்யதர்சி.**

ஸ்ரீ. உப, V. N, செல்லமய்யங்கார், சேலம்.

**உதவி கார்யதர்சி.**

,, M. V. குப்புசாமி அய்யங்கார் ஸ்ரீநிவாஸ அச்சாபீஸ், சேலம்.
ஸ்ரீமான். இட்டகுடி ராமநாதம் செட்டியார், செவ்வாப்பேட்டை.

**ஜூன்ஜி.**

,, த. வீராஸாமிசெட்டியார், செவ்வாப்பெட்டை.

**தீர்மானங்கள்.**

(1) சென்னை ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையின் 12-வது வார்ஷிகமஹாஸங்கம் கொண்டாட்டத்தின் வைபவத்தைப்பற்றி சென்ற மார்கழிமீ த்திய தீபிகையில் பிரசுரம் செய்யப்பட்டிருந்ததை கார்யதர்சியால் வாசிக்கப்பட்டு, சபையோர்கள் உத்ஸாஹத்துடன் கேட்டு ஆநந்தித்தார்கள்.

(2) சேலம் ஸபையை சென்னை ஸபைக்கு கிளை ஸபையாகச் சேர்த்துக்கொள்ள ஸபையோர்கள் எல்லோரும் ஏகோபித்து தீர்மானித்து சென்னை ஸபை கார்யதரிசிக்கு இத்தீர்மானத்தை அனுப்பவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

(3) சேலம் ஸபைக்கு மேல் குறிக்கப்பட்டவர்களை அங்கத்தினராக நியமிக்கப்பட்டதாக தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸுந்தரஸிம்ஹ வாஸ்ரூஹமணே நம:

21 JUN 1923

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.

கார்யதர்சி:—ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 13.] ருதிரோத்காரிஸு சித்திரைமீ [ஸஞ்சிகை 7.

"ஸ்ரீஹரவநகரீநம ததாஸவணம் ஸவிகாஸ மஸாவாஸம்வாஸ। ஜயாதெந. வஸாஸஹக்கஸூஸ்வாநநாஜெப விஜயவவெ ஸதிஸஹு ஜெ ஜநயஷ்ய ॥"

[ஸ்ரீ பாகவதம்-1-9-33.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

### ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் விசேஷ ஆகாரங்கள்.

உலகின் கண்ணுள்ள ஆஸ்திக மதங்க ளெல்லாவற்றிலும் வேதாந்தங்களினாலே ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட மதமே மிகவும் புராதனமானது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இந்து மதங்கள் என்று பொதுவாக இக்காலத்தில் வழங்கப்படுகின்ற மதங்களெல்லாம் தங்கள் தங்கள் கோட்பாடுகளை ஸ்தாபிக்க உபநிஷத்துக்களிலிருந்து சிற்சில வாக்யங்களை எடுத்து உதாஹரிக்கின்றன வாகையால், கிறுஸ்துமதம், மகம்மதியமதம், முதலிய பிறநாட்டுச் சமயங்களையும், அவற்றை ஒருவாறு பின்பற்றி நம் நாட்டிலேயே பிறந்து வளர்ந்த சீக்கியமதம், ப்ரும்ம ஸமாஜம், முதலியவற்றையும் விட வேறான ஆஸ்திகமதங்க ளனைத்தும் பொதுவாக இந்துமதம் என்று வழங்கப்பட்டு வருகின்றன. ஸர்வஜகத் காரணமாகிய ஈச்வரன் ஒருவனை ஒப்புக்கொள்ளாத பௌத்த ஜைனமதங்களும் இந்துமதத்துக்கு புறம்பானவை.

இப்படிப் பொதுவாக கூறப்படும் இந்துமதத்தில் பரஸ்பர விருத்தஅம்சங்களை உடையனவாயும் உபநிஷத்துக்க ளுடையவும் அவற்றின் பொருளை வெளியிடும் ஸ்ம்ருதி புராணதிகளுடையவும் அடிப்படையான (foundation)

186726.

ஸித்தாந்தங்களுக்கு எதிர்நடையான உபதேசங்களை உடையனவாயும் உள்ள மதங்கள் பல இருக்கின்றன. வீரன், காட்டேறி, மாரி, காளி, ஸீத்தாளா, என்ற மாதிரியான க்ஷுத்ரதேவதைகளை வணங்கி வழிபடும் மதங்களும், மது மாம்ஸாதி ஸேவநங்களை உபாஸநங்களாக உபதேசிக்கின்ற சாக்த தந்த்ரங் களும் 'பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்' என்று வேதாந்தத்திலேயே நிராகரிக்கப் பட்ட பாசுபதாதி மதங்களும், வைதிகங்களான விசிஷ்டாத்வைத த்வைத அத்வைத மதங்களும், இவற்றின் ஏகதேசத்தை (சில அம்சங்களை) மட்டும் அங்கீகரித்த ராமாநந்தர், கபீர்தாஸ், வல்லபாச்சாரியார், ஸ்ரீக்ருஷ்ண சை தன்யர், நிம்பார்க்கர், துளஸீதாஸ், துக்காராம் பஸவர்முதலிய பெரியோர் கள் ப்ரவர்த்தனம் செய்த மதங்களும் எல்லாம் ஹிந்துமத மென்று வழங் கப்படுகின்றன. இவற்றுக்குப் பரஸ்பரமுள்ள பேதங்கள் மிகவாயினும் அவை ஸாமான்யமாக அறியப்படுகின்றன வல்ல. பிறநாட்டவர்களாகிய ஐரோப்பியர் களுக்கு இவை புலப்படுவதும் ப்ரயாஸம். அன்னிய நாட்டுக்கல்வியிலேயே ஊறிவளரும் நம்மவர்களுக்கும் இவற்றை உள்ளபடி தெளியாததன் காரண மாகச் சில விபரீத நினைவுகளும் உண்டாகின்றன. கிறஸ்தவர் மகம்மதியர் முதலியவர் தவிர மற்றவர்க ளெல்லாரும் இந்துக்க ளாகையால் அவர்களு க்கு வைதிகங்களான தேவாலயம் முதலிய ஸ்தாபனங்களிலும் பொதுவான பாத்யங்கள் உண்டென்று அவர்கள் ப்ரமிக்கிறதுண்டு. ஆனதுபற்றி ஆஸ்திக ரான ஸ்ரீவைஷ்ணவர்கள் நமது மதத்தின் உண்மையான ஸ்வரூபம் இன்ன தென்பதை அறியவேண்டியது மிகவும் ஆவச்யகம். காலப்போக்கையும் அர சாங்கத்தார் நமது மதஸ்தாபநாதிகளைப்பற்ற நம் நாட்டினர் கையில் கொடு த்திருக்கும் அதிகாரம் செலுத்தப்படும் முறைமையையும் ஆலோசித்தால் இத் தகைய பராமர்சம் நம்மவற்கு இன்றியமையாதது என்பது நன்றாய் விளங்கும்.

தெய்வ மொன்றை ஒப்பும் ஆஸ்திக மதங்களும் அதை இசையாத நாஸ் திக மதங்களும் வைராக்யம், அஹிம்ஸை, ஸத்யவசனம், பரோபகாரம், ஸ்வார் த்தபரித்யாகம், தீனஸம்ரக்ஷணம், முதலிய தர்மங்களை விசேஷித்து உபதே சிப்பதுண்டு. இவையெல்லாம் ப்ரத்யக்ஷத்தில் அறியக்கூடும் அர்த்தங்கள். ஒவ்வொரு ஸித்தாந்திகளையும் இவற்றின் ஒரோர் ஆகாரத்தினால் ஆப்தர்கள் என்று சொல்லக்குறை யில்லை. 'ஸர்வத: ஸாரமாதத்யாத்' (எல்லா இட ங்களிலிருந்து ஸாரமான விஷயங்களை சேகரிக்கவேண்டும்) என்பது ஸ்ரீவை ஷ்ணவரின் கடமை. ஸ்ரீபாஷ்யகாரரும் வேதாந்தவிரோதிகளான ஸாங்க்யம், யோகம், வைசேஷிகம், ந்யாயம் பாசுபதம் முதலிய மதங்களை நிராகரிக்கும் ஸூத்ரங்களை வ்யாக்யானம் செய்த அவஸரத்தில் ' இங்கு சாரீரக சாஸ்திரத்தில் தத்வங்கள் ப்ரும்மாத்மகங்கள் அல்ல என்று ஸாங்க்யமதம் சொன்னதை மாத் திரம் நிராகரித்திருக்கிறது; அவற்றின் ஸ்வரூபத்தைப்பற்றிபேசியிருப்பது நிரா கரிக்கப்படவில்லை யோகத்திலும் பாசுபதத்திலும் ஈச்வரனைக் கேவலம் நிமி



த்தகாரணமாக்கி யிருப்பதையும் ஈச்வரன், ஜீவன், ப்ரக்ருதி என்னும், பிர அவர தத்வங்களைப்பற்றச் செய்யப்பட்ட விபரீத கல்பனைகளையும், வேதத் தால் பஹிஷ்கரிக்கப்பட்ட ஆசாரங்கள் சொல்லப்பட்டிருப்பதையும் மட்டும் வேதாந்தங்கள் நிராகரித்தனவே ஒழிய, யோகஸ்வரூபத்தை யாவது பசுபதி ஸ்வரூபத்தை யாவது ஆக்ஷேபிக்கவில்லை. அம்மதங்களிற் சொல்லிய ஸ்வ ரூபங்கள் மட்டும் அங்கீகரிக்கத் தக்கவைகளே. ஜைன பௌத்தமதங்களில் கூறப்பட்ட தத்வங்கள்போல் முழுமையும் பஹிஷ்கரிக்கப் படவில்லை' என்று அருளிச்செய்தார். ஆனால் வேதாந்த ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்துத் "தேஹம் இந்திரியம் முதலியவைகளைக் காட்டிலும் வேறுபட்டவனாய் நித்ய னாய் இருப்பான் ஒரு ஆத்மா உண்டு. இச்சேதனா சேதனங்கள் இரண்டும் ஒழிய இவற்றிற்கு அந்தர்யாமியாய் சேஷியாய் இருப்பான் ஒரு பரமாத்மா உண்டு. இப்பரமாத்மாவை ஒழிய இவ்வாத்மாவுக்குத்தானும் பிறரும் ரக்ஷ கர் ஆகமாட்டார்" என்று தத்வத்தை அறிகிற நாம் இவ்வாத்மாவுக்கு இச் சரீரம் விழுந்தபிறகு பரலோகாதிகளில் உண்டாகக்கூடிய ஸுகப்ராப்தி என்ன, துக்கபரிஹாரம் என்ன, இவற்றுக்கு அனுகுணமாக உலகவாழ்க்கையில் நட ந்து கொண்டு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபங்களான ஸன்மார்க்கங்களை அவ் வேதாந்த சாஸ்த்ரங்களைக் கொண்டே நிஷ்கர்ஷித்துக் கொள்ளவேண்டியது நம்முடைய கடமையாதலால் பிறமதங்களைக் காட்டிலும் வேதாந்த மதத்தில் விசேஷித்து ப்ரகாசம் பண்ணப்பட்ட தத்வஸ்வரூபம் உபாயஸ்வரூபம் புரு ஷார்த்த ஸ்வரூபம் இவற்றைத் துப்புரவாக நிர்ணயிக்க வேண்டும். இப்படி நிர்ணயிக்கும்போது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமாகிய ஸ்ரீவிசிஷ்டாத்வைத மதமே வைதிக மதங்களுக்குள் ப்ரஸ்தானத்ரயங்கள் என்னப்பட்ட உபநிஷ த்துக்களையும், ப்ரும்மஸூத்ரத்தையும், பகவத்கீதையையும், உள்ளபடி அனு ஸரிக்கும் மதம் என்று நம் ஆசார்யர்கள் நிஷ்கர்ஷித்தார்கள், ஸூத்ர பாஷ் யங்கள் பல உண்டாய் அத்வைதம் த்வைதம் என்றபடிகளில் வேதாந்தமதம் நிலைபெறுவதற்கு வெகுகாலத்திற்கு முந்தியே ஆழ்வார்களும் தாம் அருளிச்செ ய்த திவ்ய ப்ரபந்தங்களில் வேதாந்தமத மென்பது ச்ருதி ஸ்ம்ருதி புராணங் களில் ப்ரகாசிப்பிக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ மதந்தான் என்று பகவதனுபவ ரூபமாகத் தமது நிஷ்கர்ஷத்தை வெளியிட்டார்கள். இக்காலத்திய மேல் நாட்டுக்கல்வியிற் பயின்ற விமர்சகர்களும் வெகுவாய் இந்த அபிப்ராயத்தை அனுஸரித்து பகவத் ராமானுஜ மதமே முன்பின் விரோதமில்லாமல் வேதா ந்த மதத்தை ப்ரதிபாதிக்கிற தென்று எண்ணுகிறார்கள்.

அந்நிய தேசத்து ஸம்ஸாரிகளுக்கும், பொதுவாய் நம் நாட்டு மதங்கள், அதி லும் விசேஷித்து வேதாந்தமதம், இவைகளுக்கும் குறிப்பிடத்தக்க ஒருவித் தியாஸம் உண்டு. அதாவது நம்மதங்களில் முதலில் ஈச்வரன், ஜீவன், ப்ரபஞ்சம், ஆகிய தத்வங்களின் ஸ்வரூபம், பரஸ்பரமுள்ள ஸம்பந்தம் முத

வியவைகளை நிரூபித்துவிட்டு இந்த நிரூபணத்தினால் நாம் அடைய வேண்டிய சாச்வதமான பரமப்ரயோஜனம் (அதாவது மோக்ஷம்) இன்னதென்று நிஷ்கர்ஷித்து அதை அடைவதற்கான உபாயங்களாகிற பக்தியோகம், சரணாகதி முதலியவைகளையும், இப்படித் தெரிந்தவன் வாழ்நாளில் நடந்துகொள்ளவேண்டிய ப்ரகாரங்களும் உபதேசிக்கப் படுகின்றன. அதாவது நமது மதவிசாரங்கள் தத்வவிசாரமென்றும் ( metaphysics ) தர்ம விசாரம் என்றும் (theology or religion) இரண்டு பிரிவாயிருக்கும். தர்ம விசாரமும் பரலோக ஸம்பந்தமானதென்றும் ஐஹிகமென்றும் உட்பிரிவுகளை உடைத்தாயிருக்கும். அந்நியநாட்டு மதங்களில் பரலோகத்தைப்பற்றிய உபதேசங்கள் காணப்பட்டாலும் ஐஹிக தர்மங்கள் மட்டுமே விசேஷித்து உபதேசிக்கப் படுகின்றன. நம்நாட்டிலும் பௌத்த ஜைனமதங்களினுடையவும் புதுமதங்களாகிய ப்ரும்ம ஸமாஜம் முதலியவற்றி னுடையவும் கொள்கைகள் வெகுவாக ஐஹிகதர்மங்களையே (morals) பற்றினவையாக இருக்கின்றன. இம்மதங்களில் தத்வவிசாரமென்பது மிகவும் குறைவு. தத்வவிசாரமானது மத ஸம்பந்தமில்லாத ஸித்தாந்தமாகவே அத்தேசங்களில் பயிற்சி செய்யப்பட்டு வருகின்றது. இதனால் தத்வவாதியானவன் (the philosopher) ஆஸ்திகனாக இருந்தபோதிலும் அவன் ஆஸ்திகதைக்கு அவனுடைய தத்வஸித்தாந்தம் காரணமாக வேண்டிய அவச்யமில்லை. உதாரணமாக கிறிஸ்துவ மதத்தில் ஈச்வரன் தன்னிச்சையினால் ப்ரபஞ்சத்தை உண்டாக்கி அதில் முதலில் ஒரு மனுஷ்ய தம்பதிகளை ஸ்ருஷ்டித்து விட்டாரென்றும், அந்த தம்பதிகள் முகமாக உலகத்தில் ப்ரஜைகள் வ்ருத்தியடைந்தன என்றும், அந்த தம்பதிகள் கடவுளின் கட்டளையை மீறிநடந்ததினால் உலகத்தில் பாபம் உண்டாய் விட்டதென்றும், அந்தப்பாபத்திலிருந்து மனிதர்களை விடுவிப்பதற்குக் கடவுளே கிறிஸ்து வென்னும் தம் புதல்வனாக அவதரித்து மரித்து உலகத்தினரைப் பாபத்திலிருந்தும் மீட்டார் என்றும், அத்தகைய கிறிஸ்துவைப் புருஷகாரமாகக்கொண்டு கடவுளிடத்தில் மன்னிப்புகேட்டுக் கொள்கிறவர்களுக்குத்தான் மோக்ஷமென்றும் மற்றவர்களுக்கு நரகமென்றும் உபதேசிக்கப்படுகிறது. இதில் கடவுள் இன்னபடி யிருப்பாரென்றாவது, ஜீவன் என்பது சரீரமேதானா அல்லது வேறான வஸ்துவா என்றாவது, ப்ரபஞ்சம் என்பது எப்படிப்பட்ட வஸ்துவினால் உண்டானது என்றாவது, கடவுள் ஜீவன் ப்ரபஞ்சம் என்பவைகளுக்குப் பரஸ்பரம் ஏதாவது ஸம்பந்தம் இருக்கிறதா என்றாவது விசாரிக்கப்படவில்லை.

இவற்றை எல்லாம் விசாரிப்பது மதக்ரந்தங்களுக்குப் புறம்பான தத்வ சாஸ்திரங்களேயாகும், அவற்றிலும் ஈச்வரனுடைய ஸ்வரூபம் குணம் ஸம்பந்தம் முதலியவற்றைப் பற்றிய விசேஷ விசாரணையே கிடையாது. தாங்கள் பிறந்து வளர்ந்த மதங்களில் பற்று இருப்பது எவருக்கும் ஸஹஜம்



இந்த அபிமானம் பிறர் இழுக்க இழுபடாமல் இருப்பதற்கு மாத்திரம்தான் உதவும். புத்திமானானவன் தான் அனுஷ்டிப்பதற்கென்று மதக்கொள்கைகளைச் சீர்தூக்கும்போது கீழ்க்கூறியபடி ஈச்வரன் ஜீவன் மோக்ஷம் நரகம் முதலியவைகள் எப்படிப்பட்டவை என்று அறிய விரும்புவது நிச்சயம். இவைகளின் உண்மை தெரிந்தாலல்லது பகவானுடைய அப்ரீதியைத் தவிர்த்து அனுக்ரஹத்தைத் தேடுவதற்கு உபாயங்களை நாடுவது ஸம்பாவிதமல்ல. இதை நினைத்துத்தான் வேதாந்தங்கள் 'ப்ரும்மஜ்ஞானத்தினால்தான் மோக்ஷம்' என்றும், 'மோக்ஷத்திற்கு வேறுவழியில்லை' என்றும் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டன. அதாவது கர்மபலங்களை அனுபவிக்கும் ஜீவனுடைய ஸ்வரூபம் இன்னது, இவ்வனுபவங்களுக்கு ஸ்தானமாகிய ப்ரபஞ்சம் இத்தன்மையானது, இவ்விரண்டுகளையும் நியமனம் பண்ணி இவைகளுக்கு ப்ரபுவாயிருக்கும் பரமாத்மா இன்னபடி யிருக்கிறான், என்றும், 'பகுத்தறிந்து ஸர்வேச்வரனை பகவானைச் சரணமடைகிறவன் அவன் க்ருபையினால் மோக்ஷமடைகிறான்' என்பது உபநிஷத்துக்களின் தீர்மானமான உபதேசம்.

ஸ்ரீபாகவதம் முதலிய புராணங்களிலும், ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களிலும், ஸ்ரீஆளவந்தார், ஸ்ரீஉடையவர், முதலிய ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளிலும் சொல்லப்பட்ட பகவத் ஸ்தோத்ரங்களெல்லாம் உபநிஷத்துக்களில் விவரிக்கப்பட்ட இந்தத் தத்வஜ்ஞானத்தை முன்னிட்டுக்கொண்டு பகவானுடைய திவ்யாத்ம ஸ்வரூபம், ராமகிருஷ்ணாதிரூபங்கள், குணவிசேஷங்கள், பகவானுக்கும் சேதனர்களுக்கும் இருக்கும் பிரிக்க வொண்ணாத ஸம்பந்தங்கள், முதலியவைகளை அனுஸந்தானம் செய்துகொண்டே அதன் அனுபவத்தினால் உண்டான ப்ரீதி உள்ளடங்காமல் வாய்விட்டு வெளியிடப்படும் ப்ரகாரங்களாக இருக்கும். இது நமது மதத்திற்கு அஸாதாரணமான ஒருவிசேஷம். பிறமதங்களில் பகவத் ஸ்தோத்ரங்களிலும் ப்ரார்த்தனைகளிலும் கடவுளிடத்தில் பயம் விச்வாசம் அன்பு முதலியவை ஒருவாறு காணப்படுமாயினும் நமது மதத்தைப்போல் அவையெல்லாம் ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் நித்தியமாயிருக்கும் பிறிக்கவொண்ணாத ஸம்பந்த அனுபவத்தை அடி ஒட்டினவையாகக் காணப்படா. இவ்வர்த்தத்தை விளக்குவதற்கு உதாஹரணம்:— அபராதங்களைப்பண்ணிய சேதனன் அனுதாபத்தையடைந்து கடவுளுடைய ஆஜ்ஞையை இனித்தவறுகிறதில்லை என்று நிச்சயம் பண்ணிக்கொண்டு கடவுளிடத்தில் தனது அபராதங்களை க்ஷமிக்கவேண்டுமென்றும் ரக்ஷிக்கவேண்டுமென்றும் சரணமடைந்தால் கடவுள் ரக்ஷித்து மோக்ஷங்கொடுப்பார் என்று எல்லா மதங்களும் உபதேசிக்கக்கூடும். கடவுள் சக்தரானபடியாலும் நம்மிடத்தில் அன்புள்ளவரானபடியாலும் அவச்யம் ரக்ஷிப்பாரென்றும் அந்தந்த மதங்களில் சொல்லப்படுகின்றது. நமது மதத்திலோவென்றால் ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்திகளையும் உடையவனாய் அவர

வர்கள் கர்மத்துக்குத் தக்கபடி பலங்களைக்கொடுக்கிறவனாய் பரிபூர்ணனாய் இருக்கும் ஸர்வேச்வரன் அநந்த அபராதங்களையுடைய நமக்குக்கிட்டுவதும் அவனை அடைவதற்கு ப்ரதிபந்தகங்களான அனேக பாபங்களையுடைய சேதனர்களுக்கு அளவில்லாத மோக்ஷஸாம்ராஜ்யத்தைக் கொடுப்பதும் இதை நாம் செய்யும் பக்தி, ப்ரபத்தி, முதலிய அல்பவ்யாபாரங்களை முன்னிட்டுத் தருவதும், பரிபூர்ணமான மனதுடன் இதைத்தருவதும், உயர்ந்தவன் தாழ்ந்தவன் ஜ்ஞானி அஜ்ஞானி, அதிகத் தர்மங்களைப் பண்ணினவன் குறைவாகப் பண்ணினவன் என்றமாதிரியான தாரதம்யங்களைப்பாராமல் 'ஸமோஹம் ஸர்வபூதேஷு' (ஸர்வ பூதங்களிடத்திலும் நான் ஸமமாக இருப்பவன்) என்றபடியே தன்னைச் சரணமடைந்தவர்களுக்கெல்லாம் பரமபலத்தைத் தருவதும், அப்படிக்கொடுப்பதும் சேதனர்களுடைய ப்ரயோஜனத்துக்கு என்பது முக்கியமல்லாமல், அவர்களை ரக்ஷிப்பதில் தன் ப்ரயோஜனமே ப்ரதானமென்று பகவான் நினைப்பதும், எல்லாம் கீழே நாம் தத்துவவிசாரத்தினால் அறிந்த ஜீவேச்வர ஸம்பந்தத்தின் காரணமாய் ஸ்வபாவ ஸித்தமாய் விலக்கவொண்ணாதவையாய் மிகவும் ஸுகரூபங்களாய் இருப்பவையென்று விளக்கப்படுகின்றன.

இந்த ஸம்பந்தத்தைத்தான் சேஷசேஷி ஸம்பந்தமென்கிறது. இந்த ஸம்பந்த ஜ்ஞானத்துடன் செய்யும் பகவதனுபவத்தினால் பகவானிடத்திலும் அவன் கருணையிலும், த்ருடமான விச்வாஸமும், மனதுக்கு ஸாத்விகமான தைர்யமும், நம்மைப்போல் பிறர்களும் பகவானுடைய விபூதிகள் (சொத்துக்கள்) என்று அறிவதினால் பிறரிடத்தில் ஸஹோதர வாத்ஸல்யமும் தானாகவே உண்டாகின்றன.

இப்பொருள்களை

'தஞ்சமாகிய தந்தைதாயொடு தானுமாய் அவையல்லனாய்
எஞ்சலில் அமரர்குலமுதல் மூவர்த முள்ளுமாதியை,
அஞ்சி நீருலகத்துள்ளீர் அவனிவ னென்று கூழேன்மின்
நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும் நீள்கடல் வண்ணனே.' என்றும்

'பயிலும் சுடரொளிமூர்த்தியைப் பங்கயக்கண்ணனை,
பயிலவினிய நம்பாற்கடல்சேர்ந்த பரமனை,
பயிலும் திருவுடையார் யவரேலும் அவர்கண்டீர்
பயிலும் பிறப்பிடைதோ றெம்மையாளும் பரமரே' என்றும், பாசுரங்களினால் ஆழ்வார் விளக்கியருளினர்.

இப்படி இன்றியமையாதது என்று சொல்லப்பட்ட தத்வஜ்ஞானம் கேவலம் வேதாந்த வாக்யங்களை வாசிப்பதினால் உண்டாகும் அர்த்தஜ்ஞானமன்று என்பது தானே விளங்குகிறது. அதனால்மட்டும் பகவானுடைய க்ருபையும் மோக்ஷலாபமும் கிடையாது. மேலும் 'ஜீவனும் ஈச்வரனும் ஒன்றே; ஜீவர்



கள் வேறு என்பதும் ப்ரபஞ்ச மென்பதும் எல்லாம் பொய்; இவையெல்லாம் மாயையினால் உண்மைபோல் தோன்றுகின்றன; மாயை என்பதும் உண்மையில் இல்லை என்கிற ஜ்ஞானமும் மோக்ஷ ஸாதனமாகாது. இந்தப் பக்ஷத்தில் மாயை ஈச்வரனைபற்றிவிட்டதென்றும், ஈச்வரனுக்கே மோக்ஷத்தை தேடவேண்டிய அவச்யம் உண்டாயிற்று என்றும் சொல்லவேண்டிவரும். மாயாவாதம் உபநிஷத்துக்களின் உபதேசங்களுக்குப் பொருந்தினதல்லவென்று ஸ்ரீராமானுஜ பகவான் நிஷ்கர்ஷித்தருளினான். இது ஸ்ரீவைஷ்ணவமதத்தின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று.

[தொடரும்.]

## தேவாலய மடமசோதா சட்டத்தின் முடிவு.

சட்டநிரூபண ஸபையில் தேவாலய மடவிஷயமான சட்டம் ஸ்தாபிதமாயிற்று. அதை அபிநிவேசத்துடன் ஆதரித்தவர்கள் அந்தஸபையில் அதிகாரத்தையும் ஆதிக்யத்தையும் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் யாவத் ஜனங்களையும் தமக்குள் சேர்த்துக்கொண்டு ப்ராஹ்மணர்களை மட்டும் விலக்கியிருக்கின்றனர். ப்ராஹ்மணர்களை நம்பவேண்டாம், ப்ராஹ்மணர்களுக்கு உபகரிக்க வேண்டாம், ப்ராஹ்மணர்களுக்கு வோட் (Vote) தர வேண்டாம், என்று அவர்களுடைய உத்கோஷம். அவர்களுக்குள் முக்யமந்திரியாக ஏற்பட்டவர் கலியுகத்தில் ப்ராஹ்மண சூத்ராதிகள் இரண்டே உளதென்று சட்டநிரூபண ஸபையில் வ்யவஹரித்தார். ஆகவே ப்ராஹ்மண த்வேஷிகளான சூத்ரர்கள் மேற்படி ஸபையில் ஆதிக்யத்தை வஹித்திருக்கின்றார்கள் என்று ஏற்படுகின்றது. அங்கே அவர்களுக்கு ஸஹகாரிகள் பஞ்சமர், துருஷ்கர், கிறிஸ்தவர்கள். கவர்ன்மெண்டே அவர்களுடைய தாய் முடிந்தபடியால், ஸபையை அலங்கரிக்கும் உத்யோகஸ்தர்களும் அவர்களுக்கு ஸஹாய பூதர்களானார்கள்.

இந்த ஸ்திதியில், மேற்படி சட்டப்ரேரகரான மந்திரி தமது வ்யாபாரங்களிலும் உத்தேசங்களிலும் ப்ராஹ்மணர்களுடைய விச்வாஸத்தையும் அபேக்ஷிப்பதாகச் சில உக்திகளால் ஊகிக்கக்கூடும். அது எவ்வண்ணம் பலிக்கும்?

ப்ரதமத்தில் இந்த மசோதா சட்டமானது ஸர்வஜநோபகாரங்களான வ்யாபாரங்களைக்குறித்து, தேவஸ்தான மடங்களுடைய த்ரவ்யாபஹாரத்தில் மட்டும் ப்ரவ்ருத்தித்ததாக யோசிக்கப்பட்டது. இப்போது அதுபரிணமித்

தக்ரமத்தில், ஸ்வஜனங்களுக்குச் சில உத்யோகப்ராப்தியோடு ப்ராம்ஹண ஶ்ரேஷ்டர்களுடைய அவமதியையும் ப்ரஹத்விட்டுக்களான சூத்ரர்கள் உத்தேசித்து விட்டார்க ளென்று நினைக்க வேண்டியதாயிற்று.

ஜாதியால் ப்ராஹ்மணன் முற்காலம் ஸத்வகுண ப்ரசுரன். பிராஹ்மணர்க்குள் ப்ரஹ்மவித்தானவன் அத்யாத்ம நிஷ்டையோடு ஶுத்தமான சாரித்ரத்தில் நிலைத்தவன். ப்ரஹ்ம வித்தமர்க்குள், ஸந்நியாஸி ஏஷணாத்ரய வர்ஜிதன் ஜ்ஞாநியானவன் தானென்றே பகவான் நிஶ்சயித்தார். ஜ்ஞாநியான ஸந்யாஸி ஆசார்யனுமானால் அவனுடைய ஶிஷ்யர்களுக்கு அவனைவிடத் தெய்வம் இவ்வுலகத்திலில்லை.

இந்த ரூபமான புத்தியால் ஶிஷ்யர்களாலும் இதரர்களாலும், தங்களுடைய ஶ்ரேயஸ்ஸை உத்தேஶித்தும், ஸ்வாபிமானத்தைத் தவிர்த்தும், பகவானுக்கு ஸமர்ப்பிப்பதைப் போலெண்ணி ஸந்யாஸிகளுக்கு ஸமர்ப்பிக்கப்பட்ட பொருள்களையும், அவற்றின் வ்ருத்தி அம்ஶங்களையும் குறித்து, அபூகல்பனையாக் அவர்களை டிரஸ்டிக ளென்று பாவித்து, அவர்களைக் கணக்குக் கேட்கவும், மற்ற விதமாக நிர்ப்பந்திக்கவும், சில லௌகிகர்களை ஏற்படுத்துவது தர்மமோ? ஸந்யாஸிகளாயினும், அவர்கள்மீது கிஞ்சித் மேல்விசாரணை வேண்டுமென்றார் மந்திரி. விசாரணை செய்பவரை யார் விசாரிப்பது? அவர்களை நியமிக்கும் உம்மை யார் விசாரிப்பது? நாமும், நாமேற்பாடு செய்பவர்களும் ஶுத்தசாரித்ர நிஷ்டர்கள்; எங்கள்மீது விசாரணை வேண்டாமென்பதுபோல் அவர் சொற்கள் வெளிவந்தன அப்படியா? ஸந்யாஸிகளான மடாதிபர்களுக்கு அவ்வளவு சாரித்ரம் ஏற்படாதா?

ப்ராஹ்மண மடாதிபதிகள்மீது உம்மை அதிகாரம் செலுத்தும்படி யார் வேண்டினார்கள்? அவர்கள் டிரஸ்டிகள் என்பீர். கும்பகோணம் சங்கராசார் ஸ்வாமி அதை மறுக்கின்றார். ப்ராஹ்மண மடாதிபதிகளும் அவர்கள் ஶிஷ்யர்கள் யாவரும் அவர்கள் டிரஸ்டிகள் அல்லர் என்பார்கள் நீரேன் அவர்களை டிரஸ்டிகள் என்பீர்? உமது அபிநிவேஶம் ஒன்று தான் அதற்கு மூலம்?

ஜட்ஜ் முத்துஸாமி அய்யர் அவ்வண்ணம் யோசித்தார் என்பீரோ? அவரது அந்த எண்ணம் வெளியார்க்கு எட்டவில்லை. எட்டியிருந்தால், உத்தரக்ஷணத்தில் ஆக்ஷேபங்கள் உதித்திருக்கும். அவ்வாக்ஷேபங்களை அவர் உம்மைப்போல் அநாதரிக்கமாட்டார்.

கோர்ட்டுகளில் மடங்களின் ஸ்திராஸ்திகளைத்தக்க காரணங்களின்றி மடாதிபதிகள் விற்கக்கூடா தென்று தீர்மானங்கள் உண்டென்று சொல்லுவீர். இவ்வண்ணம் தீர்மானங்கள் குடும்ப மானேஜர்கள் விஷயமாயும் ஹிந்து விதவைகள் விஷயமாயும், ஏற்பட்டிருக்கின்றன. அதனால் பரர்கள் கேட்கும்படியான நிலைமையில் அவர்கள் டிரஸ்டிகளாவார்களோ? அவ்வண்ணம் மடாதிபதிகளும் ஆகமாட்டார்களென்று ஏன் நீர் யோசிக்கக்கூடாது?



மடங்கள் உண்டான முதல் மடாதிபதிகளை யாரும் அடக்கியாண்டதில்லை. இந்தப்புத்தி, முதல் மந்திரிக்கு உண்டானது விந்தையே!

மடாதிபதிகளான ஸந்யாஸிகள் பட்ஜட் (Budget) வ்ருஷாந்தரக்கணக்குக் திட்டம், ஸொத்துஜாபிதா, முதலியவைகளைத் தயாரித்து, ஶோதித்து, கையெழுத்து செய்துச், உறுதிமொழியிட்டு, ஒரு போர்டு எனும் லௌகிகர்களுக்கு விநயத்துடன் அனுப்ப வேண்டுமாம்! அந்தப் போர்டார் மேற்படிகணக்குகளைப்பற்றிச் செய்யும் உத்தரவுகளுக்கு அவர்கள் கீழ்படிந்து நடக்கவேண்டுமாம்! இந்தப்படிச்சட்டம் ஏற்பட்டுவிட்டது! இது கலியுக கோலாஹலம்!

இந்த அலங்கோலம் இந்த ப்ராஹ்மண ஸந்யாஸிகளுக்குத் தகாதென்றும், போர்ட்டார்கள், ஸந்யாஸிகளால் ஏற்படுத்தப்பட்ட ஏஜண்டுகளுடன் வேண்டிய கரஸ்பான்டென்ஸ் (Correspondence) வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், சட்டத்திருத்தலை ஒருவர் அபேக்ஷிக்கப் புதிதாக ஏற்பட்ட அட்வோகேட்ஜனரல், (Advocate General) மாதவன் நாயர், என்பவர், ஸந்யாஸிகளே கணக்குகள் தயாரித்தல் ஶோதித்தல் முதலான யாவத் வ்யாபாரங்களையும் செய்ய வேண்டுமென்று ஆக்ஷேபித்துவிட்டார். ஸபையில் ஆதிக்யத்தைப்பெற்ற ப்ரஹ்ம த்வேஷிகள் அதை அங்கீகரித்து விட்டார்கள்.

ப்ராஹ்மண மடாதிபதிகள் அதிகாலையில் $4\frac{1}{2}$-மணிக்கு எழுந்து, இரவு 10 மணிக்கு மேல் யோகமென்கிற நித்ரைக்குப் போகின்றனர். இந்த விஷயத்தில் எனது அநுபவத்தைச் சொல்கின்றேன். மேற்படிக் குறித்தகாலங்களுக்கு இடையில் அவர்கள் ஸ்வானுஷ்டானங்களை இடைவிடாமல் நடத்த வேண்டியவர்கள். அவர்கள் கணக்குகள் பார்க்கவும் சோதிக்கவும் அவகாசம் அற்றவர்கள். கிங்கரர்களை அழைத்துப் பொதுவாகச் சிலவிஷயங்கள் சொல்வதற்கு அமையுமேயன்றி லௌகிகத் தொழில்களில் போர்ட்டாரை த்ருப்தி செய்ய அவர்கள் அந்வயித்தார்களாயின், ஶிஷ்யர்களால் ஸ்தாநத்தினின்று நிவர்த்திக்கத்தக்கவர்கள். அஹோபிலம் மடம் ஸ்வாமிகள் $4\frac{1}{2}$ - மணி முதல் $6\frac{1}{2}$-மணிவரையில் வெளியில்போய் ஸ்நாநம் செய்து, புண்ட்ர தாரணம், காலக்ரியைகள், இவற்றைச் செய்யவேண்டியிருக்கும். 7 - மணி முதல் 10-மணி வரையில் அபிகமநாராதநம் செய்யவேண்டும் பிறகு 1-மணி வரையில் சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் சொல்லவேண்டும். அப்புறம் மாத்யாஹ்நிக ஸ்நாநத்துக்குச் சென்று தத்கால க்ரியைகளை முடித்துக்கொண்டு அதன் முன்னமே ஆராதகரால் நிறைவேற்றப்பட்ட ஆராதநத்தின் மிகுதியான பாத்த

னை முடிக்கவேண்டும். 2-மணிக்குமேல் பிக்ஷைக்குப் போகவேண்டும். அது முடிந்தபிறகு கொஞ்சம் விஸ்ரமிக்கவும், மந்த்ரஜபம் செய்யவும், க்ரந்தங்களைப் பரிசீலனை பண்ணவும் வேண்டும். 5-மணிக்குமேல் ஸாயங்கால ஸ்நாநம், தத்காலோசித க்ரியைகள், இவைகளை அநுஷ்டிக்கவேண்டும். அஸ்தமித்த பிறகு புதிதாகவந்த சிஷ்ய கணங்களை விசாரிக்கவேண்டும். ராத்ரி ஆராதநத்தில் அந்வயிக்கவேண்டும். இதற்குள் மணி 10-ஆய்விடும். அப்புறம்தான் கிங்கரர்களை அழைத்து மடத்திலுடைய கார்யங்களைக்கொஞ்சம் விசாரிக்க அவர்களுக்கு இடமுண்டு.

"இப்படிப்பட்டவர்களையா போர்டார் மேலே விவரித்தபடி நிர்ப்பந்திப்பது? மேலும் இவர்களுக்குக் கணக்கு வைக்கத்தெரியாது; சோதிக்கத்தெரியாது; உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கத்தெரியாது; இவர்கள் வேதாந்தஜ்ஞாநம், தததுகுணமான வைதிகாசாரங்கள், ஸந்யாஸ தர்மங்கள், இவற்றுடன் கூடினவர்களென்று ஸ்தாநங்களுக்கு ஏற்படுத்தப்பட்டவர். இப்போது அவர்களைக் கணக்குப் பரீக்ஷைகளில் தேறும்படிகேட்டால் அது எவ்வண்ணம் கைகூடும்?

போர்டு மெம்பர்களாவார் யாவர்? சிறைக்குப்போனவன் அந்த உத்யோகம் செய்யலாமாம்! அவன் ஹிந்து மதத்தில் சேர்ந்தவனென்று சொல்லிக் கொண்டால் போதுமாம்! அதை அவன் வழிபடவேண்டாமாம்! இவ்வளவும் அதிகாரக் கோர்ணமென்ட் நிச்சயித்துவிட்டார்கள். இதற்குள் ப்ராஹ்மணர்களிடம் த்வேஷிக்கும் முகமதியர் ஒருவர் பரஜாதியர்களுக்கும் போர்டில் இடம் தரவேண்டுமென்றார். இந்த முகமதியர் இந்த மடமசோதா சட்டத்தைச் சட்ட நிரூபணசபையில் ப்ரதம ப்ரவேசம் செய்வித்தபோது, தேவாலய த்ரவ்யங்கள் ப்ராஹ்மணருக்குமட்டும் அன்னமளிக்கச் செலவாகின்றனவென்றும், ப்ராஹ்மணஸாதுக்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவென்றும், செத்துப்போன ஸம்ஸ்க்ருதபாஷையைக் கற்பிக்கும் பாடசாலைகளுக்கு உபயோகப்படுகின்றனவென்றும், மஹிமையுள்ள தமிழ்பாஷை அநாதரிக்கப்படுகின்றதென்றும், மிகவும் துக்கித்தாராம்! இவரைப்போன்றவர்கள் போர்டில் ப்ரவேசித்துவிட்டார்களாகில் ப்ராஹ்மணர்களுக்கு அதைவிட யாது விபரீதத்தை உத்தேசிக்கலாம்? அத்தகைய ப்ரவேசத்தை மந்திரி ஆமோதித்தார் போலும்!

யதிநிந்தை குலக்ஷயகாரணமென்று சாஸ்திரம் சொல்லிற்று. ஸக்ருந்நிந்தைக்கு அதுபலம். சட்டப்படி ஏற்படப்போகிற அவமதியானது நீடித்தது. ப்ரஹ்மத்வேஷிகள் தாங்கள் ஹிந்துமதத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லிக்கொண்டு இந்தப் பாவத்தில் துணிந்தார்கள். காஷாயதண்ட மாத்ரத்தால் ஸந்யாஸிகள் பூஜிக்கத்தக்கவர் என்றது சாஸ்த்ரம். இப்போது மந்தசித்தர்களிடம், லோகாசார்யர்களான யதிச்ரேஷ்டர்களுக்கு முடிவில்லாத அவமதி பலிதமாயிற்று.



தேவாலயங்களில், முக்யமாக வைஷ்ணவாலயங்களில் பெரும்பான்மையான கிங்கரர்கள் ப்ராஹ்மணர்கள்; ஸேவார்த்தமாக அவ்விடம் அதிகமாகச் செல்பவர்கள் ப்ராஹ்மணர்கள். ஹிந்துமதம் அவர்களை ஆச்ரயித்து நிற்கின்றது. அவர்களுக்கு அன்னமளித்தல் புண்யமெனப்படுகின்றது. ஸம்ஸ்க்ருத பாஷையையும், ப்ராஹ்மணர்களையும், த்வேஷித்தும், விலக்கியும், ஹிந்துமதமென்று ஒன்று இதுவரையில் ஏற்பட்டதில்லை; வைஷ்ணவசைவாலயங்களை அநுஸரித்து ஸ்வதராம் ஏற்படவில்லை. இங்கிலீஷ் பாஷையின் வ்யாபகத்தால் காலம் மாறுபட்டாலும், ஆலயங்கள், ஹிந்துமதத்தின் பூர்வஸ்திதியை ஒட்டி ஏற்பட்டன. தத்காலஸ்திதியில் ஏற்பட்ட ஸமாஜங்களுக்கு ஆலயங்கள் வேண்டாம்; அநாதிகால மடங்களும் வேண்டாம். ஆதலால் தாத்காலிக புத்தி விந்யாஸங்களில் ரமித்து, ஆலயங்களை அநாதரித்து, ப்ராஹ்மணர்களை த்வேஷித்து ஏற்பட்ட சட்டச்சபையாரில் பெருத்தவர்கள், ப்ராசீனகால ஆசாரங்களில் ஏற்பட்டு, அந்த முறைகள்படி கொண்டாடப்பட்ட ஸ்தலங்களைப் பலாத்காரமாகக் கைகொள்வது தர்மமாகுமோ?

ஏலக்ஷன் (Election) மூலமாக ஏற்படும் கம்மிட்டிகள் சூத்ரவ்யாபகமாயிருக்கும். சட்டஸபை, லோகல்போர்டுகள், நகரஸபைகள் இப்போது அவ்வண்ணம் நிற்கின்றன. ஒருவர், இருவர், ப்ராஹ்மணர்களாய்க் கம்மிட்டிகளில் புகுந்தாராயிலும், அவரால் ஆகக்கூடிய தொன்றுமில்லை. சட்டஸபையில் ப்ராஹ்மண ப்ரயத்நங்கள் முடிவுபெறுவதைக் காணலாம்! போர்டும் சூத்ரவ்யாபகமாக நிற்கும். ப்ராஹ்மணமடங்களுக்கும், கோவில்களை ஆச்ரயித்த ப்ராஹ்மணர்களுக்கும் இனியாது கதி? சட்டஸபையில் இருத்தலை வெறுத்து எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் விலகினர். மதிராஸ் கவர்ன்மெண்டை வெறுத்துவிலகின கே. ஸ்ரீனிவாஸய்யங்கார், அதில் மெம்பராகத்தாமிருந்த இரண்டு வருஷங்களைத்தாம் மிகவும் சோகிக்கத்தக்க காலமென்று வெளியிட்டார். எங்கும்பரவிய ப்ரஹ்ம த்வேஷிகளினுடைய வ்யாபகமானது ப்ராஹ்மணர்க்கும், ப்ராஹ்மண்யத்துக்கும், வேதமார்க்கத்துக்கும், ஹிம்ஸாமூலமென்று நிச்சயித்தல் நலம்.

ப்ராஹ்மணமடங்களில் ஒருஸம்பந்தமு மில்லாமலும், அந்த மடாதிபதிகளுக்குச் சிஷ்யர்களன்றியும், மந்திரியும் அவரைச்சார்ந்த சூத்ரர்களும், பஞ்சமர், துருஷ்கர், கிறிஸ்துவர்கள் முதலானவர்கள் ஸஹாயத்தை அவலம்பித்து, மடத்ரவ்யங்களிலிருந்து கப்பம்வாங்குவதும், மடாதிபதிகளை நிர்ப்பந்திப்பதும், சட்டநிரூபண ஸபைக்குப்புறம்பாகப் பீனல்கோட் சட்டத்துக்குள்ளாகும் வ்யாபாரங்களை ஒத்துநிற்கின்றன, தேவாலயங்களில்சிலவற்றில் அவர்களுடைய அபூர்வமான நிச்சயங்கள் அவ்யாபாரங்களின் சாயலை அநுசரிக்கும். நீண்டகாலாநுபவம், அவ்வநுபவ ப்ரயுக்தமாக அநுபவிப்பவர்க்கு ஒருபாத்தியம் உண்டாகுமென்பது ஸர்வதேச ஸர்வகால ஸம்மதமாக அங்கீகரிக்கப்பட்ட ந்யாயம். கேவலம் ஸமூஹபலத்தைவிட்டு முதல் மந்திரி இந்த வழக்கைத் தீர்க்கவில்லை.

முதல்மந்திரி தமக்கு சாஸ்த்ரங்களும், புராணங்களும் தெரியுமென்றும், orthodoxy என்கிற ஆர்யஸம்ப்ரதாயபிரியமும் உண்டென்றும் சொன்னார்ம். அப்படியிருந்தால் 'இவருடைய ஸர்வஜ்ஞத்வம் [illegible] ஆகவும்' என்னும்படியாயிற்று. சாஸ்த்ரம் அநுஷ்டானப்ரயோஜனமாகப் பரிசயம்பண்ணப்படவில்லை. திரஸ்காரமே அதற்குப் பலனாயிற்று. ப்ராஹ்மணன் [illegible], அதாவது அவன் ஒருவருடனும் சண்டைசெய்யத் திறனற்றவன், அவர்கள் ஸ்வல்பஸந்துஷ்டர்களென்றும், ஸாதுக்களென்றும், ஸர்வபூத ஸுஹ்ருத்துக்களென்றும் சொல்லப்படுவார்கள். ஆதலால் ப்ராஹ்மணனென்றும், ப்ரஹ்மண்ய தேவனென்றும், ப்ராஹ்மண ப்ரியனென்றும் பகவானுடைய நாமதேயங்கள். பகவானை த்வேஷிக்கின்றவர்கள், கண்களுக்கு அகப்படாத அவனைவிட்டு, அவன்ப்ரீதிக்கு அர்ஹதையை அடைந்து நின்ற ப்ராஹ்மணர்களை ஹிம்ஸிப்பது வழக்கமென்று புராணங்கள் சொல்லும். பகவத் த்வேஷியான ஹிரண்யகசிபு என்பவன், '[illegible]' என்று ப்ருத்யர்களுக்குக் கட்டளையிட்டான்: அதாவது "த்விஜர்களுடைய க்ரியைகளுக்குக் காரணபூதனும் யஜ்ஞஸ்வரூபனும், ஸநாதனனும், சரீரனுமாய் இருக்கின்ற பரமபுருஷனான விஷ்ணு, தேவதைகள் ரிஷிகள் பித்ருக்கள் இவர்களை உத்தேசித்துச் செய்யும்கர்மங்களுக்கு நிர்வாஹகராயிருக்கின்றார். ஆதலால் எந்த ப்ரதேசங்களில் ப்ராஹ்மணர்களும், யஜ்ஞங்களும் இருக்கின்றனவோ, எங்கே வேதாத்யயனம் நடைபெறுகின்றதோ, வர்ணாச்ரமாசாரங்கள் அநுஷ்டிக்கப் பெறுகின்றனவோ, அந்தத் தேசங்களுக்குச் சென்று கொளுத்துவீர்கள், வெட்டுவீர்கள்" என்று பகவத் த்வேஷி கட்டளையிட்டான். தத்காலம் அவன், ஹிம்ஸித்த ப்ராஹ்மணர்களைப்போன்றவர்கள் இல்லை. அவர்களை ஹிம்ஸிப்பவர்களும் ஹிரண்யகசிபுவினுடைய த்ருப்தியிலிருந்தவர்கள். ஆதலால், '[illegible]' (எக்காலம், வேதங்களிலும், தேவர்களிடமும், கோக்களிடமும், ஸாதுக்களான ப்ராஹ்மணர்களிடமும், தர்மத்தினிடமும், என்னிடமும் விசேஷ த்வேஷம் பாராட்டுகின்றானோ, அப்போது அவன் சீக்கிரமாக நாசமடைவன். ஸர்வ பூதஸுஹ்ருத்



தாய், ராகத்வேஷாதிகளற்றவனாய், மஹாத்மாவாய் இருக்கும் அவனுடைய ஸுதன் ப்ரஹ்லாதன் விஷயமாக எப்போது த்ரோஹம் புரிகின்றானோ அப்போது வரங்களால் பலத்தவனாயினும் அவனை நாசம் செய்கின்றேன்) என்று சரண்யன் இப்போது ஒருவர்க்கும் ஆச்வாஸம் செய்ய இடமில்லாமல் போயிற்று.

பகவான் தண்டகாரண்ய ப்ரவேசம் செய்தபோது, ஸாக்ஷாத்தாக ஸர்வ ரக்ஷகனைக் கண்ணுற்ற அவ்வநவாஸிகளான ப்ராஹ்மண தபஸ்விகள், 'தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷயவாஸிந: । நகரஸ்தோ வநஸ்தோ வா த்வம் நோ ராஜா ஜநேச்வர: ॥ ந்யஸ்ததண்டா வயம் ராஜந் ஜிதக்ரோதா ஜிதேந்த்ரியா: । ரக்ஷிதவ்யாஸ் த்வயா சச்வத் கர்பபூதாஸ் தபோதநா: ॥' என்று ஸ்ரீராமனை ப்ரார்த்தித்தார்கள். அதாவது, 'கஷ்டமடைந்த நாங்கள், ஸர்வலோகேச்வரனான உனது லீலாவிபூதியில் வஸிக்கின்றவர்களாதலால், ஸர்வசரண்யனான உன்னால் ரக்ஷிக்கத்தக்கவர்கள். நீ நகரத்தில் இருந்தாலென்ன? வநத்திலிருந்தாலென்ன? ஸர்வ ப்ராணிகளுக்கும் ஈச்வரனான நீயே எங்களுக்கும் ரக்ஷகன். நாங்களோ இந்த்ரியங்களையடக்கிக் காமக்ரோதங்களை விட்டொழித்து, உனது உபாஸனையில் ரமித்தவர்களாதலால், அதற்கு விரோதமாக, எங்களை ஹிம்ஸிப்பவர்களை சாபாதிகளால் தண்டிக்க அர்ஹரல்லோம். அப்படித் தபோப்ரதானராய், உனக்கே சேஷபூதராயிருக்கும் நாங்கள் எப்போதும், எங்களுடைய யோகக்ஷேமங்களை வஹிப்பதாக ப்ரதிஜ்ஞைபண்ணி நின்ற உன்னாலேயே ரக்ஷிக்கத்தக்கவர்கள்" என்று ப்ரார்த்தித்தார்கள். இது தண்டகாரண்ய ப்ரதம ப்ரவேசகாலத்தில் நடந்தது. ஸ்ரீராமன் அதற்குள்ளே கொஞ்சதூரம் சென்ற பிறகு, அவ்வாரண்யவாஸிகள், 'ஸோயம் ப்ராஹ்மணபூயிஷ்டோ வாநப்ரஸ்தகணோ மஹாந் । த்வந்நாதோ(அ)நாதவத் ராம ராக்ஷஸைர் ஹந்யதே ப்ருசம் ॥ ஏஹி பச்ய சரீராணி முநீநாம் பாவிதாத்மநாம் । ஹதாநாம் ராக்ஷஸைர் கோரைர் பஹூநாம் பஹுதா வநே ॥ ஏவம் வயம் ந ம்ருஷ்யாமோ விப்ரகாரம் தபஸ்விநாம் । க்ரியமாணம் வநே கோரம் ரக்ஷோபிர் பீமகர்மபி: ॥ ததஸ் த்வாம் சரணார்த்தம் ச சரண்யம் ஸமுபஸ்திதா: । பரிபாலய நோ ராம வத்யமாநாந் நிசாசரை: ॥' (அந்த வானப்ரஸ்தர்களின் பெரியகூட்டத்தில் ப்ராஹ்மணர்கள் அதிகம். அவர்க்கு நீ நாதனாக இருக்கையில் அநாதர்களைப்போல் அவர்கள் ராக்ஷஸர்களால் மிகவும் கொல்லப்படுகிறார்கள். உனது த்யானத்தில் நிஷ்டையடைந்த அநேக ரிஷிகளுடைய சரீரங்கள் ராக்ஷஸர்களால் பலவிதமாகக் கொல்லப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றை வந்துபார். இவ்வண்ணம் வனங்களில் க்ரூரகர்மாக்களான ராக்ஷஸர்களால் தபோநிஷ்டர்கள் விஷயத்தில் பண்ணப்பட்ட கோரமான பாதைகளை

நாங்கள் ஸஹிக்கக்கூடவில்லை. ஸர்வலோக சரண்யனான உன்னை ரக்ஷகனாயெண்ணி நாங்கள் அடைந்தோம், நிசாசரர்களால் நாசம் பண்ணப்பட்ட எங்களைக்காப்பாற்றக்கடவாய்) என்று சக்ரவர்த்தித் திருமகனைப் ப்ரார்த்தித்தார்கள். இப்போது வாநப்ரஸ்தர்களும் இல்லை. தபோதனர்களும், த்யாநநிஷ்டர்களும் இல்லை. பூர்வம் இந்த நாடு ராக்ஷஸ வ்யாபகமாயிருந்தது. இப்போது அந்த ராக்ஷஸர்கள் அபாவத்தை அடைந்தார்கள். பகவான் அவதரிக்கக் காரணம் காணோம்.

பிற்காலம் ஆர்யாவர்த்தம் துருஷ்கர் வசமாய், தேவாலயங்கள் அழிபட்டும் பகவத் விக்ரஹங்கள் உடைப்பட்டும், சிந்திக்கக்கூடாத ஹிம்ஸைகளை த்விஜர்கள் அனுபவித்தார்கள். துருஷ்கர் இந்த த்ராவிட தேசத்தைப் படையெடுத்து, ஸ்ரீரங்காதி திவ்யதேசங்கள் மூடப்பட்டுப்போய்ப் பாகவதர்கள் பலர் கொல்லப்படவும், பலர் ஓடி ஒளிந்து ப்ராணனைக் காப்பாற்றவும், 600- ஸம்வத்ஸரங்களுக்கு முன்பு நேர்ந்தது. அந்தத்தசையில், ஸ்ரீதேசிகன் அபீதிஸ்தவத்தை ஸாதித்தருளினர். "ஸ்ரீரங்காதி திவ்யதேசங்களில் இதராபேக்ஷைகளுடையகந்தமற்று உனது பக்தர்களுக்குண்டாயிருக்கும் பயத்தைப்போக்கடிப்பாயாக! அங்கே பாகவத ஸம்ருத்திரூபமான ஸம்பத்தை வ்ருத்தி பண்ணக்கடவாய்! உனது ஆச்ரிதர்களுடைய சத்ருக்களை நாசம் செய்யக்கடவாய்! அங்கே உனது ஸ்வயம் வ்யக்தமான திவ்யமங்கள விக்ரஹத்தை இடைவிடாமல் தர்சிக்கின்ற நாங்கள் இவ்வுலகத்திலேயே ஸ்ரீவைகுண்டாநுபவத்தை அடைகின்றோம். ஸ்ரிய: பதியாய், ப்ரபந்நஜன ஸம்ரக்ஷகனாய், ஸமஸ்த கல்யாணகுண விசிஷ்டனாய் இருக்கும் உனது முன்பாக இதோ பரஸமர்ப்பணம் பண்ணுகின்றேன். உனது நிருபாதிகமான ஐச்வர்யத்தை உனது ப்ரஸித்தமானவையும் விசேஷ ஜ்வாலைகளோடு கூடினவையுமான திவ்யாயுதங்களைக்கொண்டு, ப்ரதிக்ஷணமும் ப்ரகாசிப்பிக்கக்கடவாய்!" இந்த ரூபமான ப்ரார்த்தனையை சரண்யன் அங்கீகரித்து, ப்ராஹ்மணர்களான பாகவதர்கள் தன்னை நிராடங்கமாய் அநுபவிக்கும்படியான தசையில், ஸ்ரீரங்கத்தில் மறுபடியும் எழுந்தருளியிருந்தான். ஸ்ரீதேசிகனைப்போன்ற பாகவதர்களும் தத்காலம் இல்லை. மல்லிக்காபூரைப்போன்ற துருஷ்கனும் தத்காலம் அவர்களைப் பாதிக்க அமையாது.

இப்போது ராஜாங்கபாஷையால் தேசம் வ்யாப்தமாயிற்று. அதைப்பரிசயம் செய்தமாத்திரத்தால் ப்ராஹ்மணராய்ப்பிறந்தபலர் மதாபிமாநத்தைத் துறக்கின்றனர். அதைப் பரிசயம்செய்த ப்ராமணர்கள் மற்றோரைக் காட்டிலும் விசேஷித்து அதிகரித்தபடியால், உத்யோகங்களிலும், வக்கீல்வேலைகளிலும் சூத்ராதிகளைக்காட்டிலும் மிகுந்து அமைந்தார்கள். இந்தஸ்திதிக்கு ப்ராஹ்மணர் காரணமாக மாட்டார்கள். கவர்ன்மெண்டார் அந்தவிஷயத்தில் உத்தரவாதிகள். ஆனால் உயர்ந்தஜாதிகளில் பிறந்தசூத்ரர் இந்தஸ்திதியை ஸஹிக்கவில்லை. உத்யோகம்செய்யும் ப்ராஹ்மணரிடம் முதலில் அஸூயைப்பட்டனர்; பின்னர்



த்வேஷம் கொண்டனர். ஸமூக பலத்தை ப்ராஹ்மண த்வேஷத்தை முன்னிட்டுக்கொண்டு வ்ருத்திசெய்தார்கள்; சட்டநிரூபணஸபையில் ப்ராஹ்மணரை ப்ராயேண விலக்கிவிட்டனர். ப்ராயேண ப்ராஹ்மணர்க்கு உத்யோக ஸ்ப்ருஹையை ஒழித்துவிட்டனர். இன்னும் த்வேஷம் வளர்கின்றது. வைதிக வேஷம் போடும் ப்ராஹ்மணரிடமும் அது பரவ ஆரம்பித்துவிட்டது. சூத்ரபுரோஹிதம் ப்ராஹ்மணனுக்கு அற்றுப்போம். சூத்ரர்களிடம் ப்ரதிக்ரஹமும் நாளடைவில் குறையும். ப்ராஹ்மணர்க்குள் ஜீவனோபாயம் குன்றும். தாரித்ர்யம் வளரும். அவர்க்குமுடிவான ஆச்ரயமாயிருந்த கோவில்களிலும் அவர்களைஒழித்துவிடும் காலம் குறுகும். அவர்களுக்குக் கோவிலில் சிலபாத்யங்கள் இருந்தாலும், அவை கெட்டால் அவர்கள் அவற்றை ஸ்தாபிக்கக்கோர்ட்டுகளுக்கும் போகக்கூடாதாம்! அதுவிஷயத்தில் விசாரணையை ப்ராஹ்மணசத்ருக்களான சூத்ரர்களே மேற்கொள்வார்கள். இன்னும் சூத்ரர்களுக்கு ஒருவிதமான ஸம்பந்தமுமற்ற ப்ராஹ்மணமடங்களும் பலாத்காரமாக ஆக்ரமிக்கப்பட்டன. ப்ராஹ்மண ச்ரேஷ்டர்கள் அவமதிக்கப் படுவார்கள். மடங்கள் கோவில்கள் இவற்றின் சொத்துக்கள் சூத்ராக்ராந்தங்களாய்விடும். ஹிரண்யகசிபு, ராவணன், துருஷ்கர்முதலானோர் ப்ராஹ்மணரைக் கொன்றார்கள். இப்போது கொலையில்லை. கொடுமையில் கர்வங்கழிக்க ப்ராஹ்மணன் [illegible]ப்பங்கிக்கப் படுவான். இதன்பலனோ விப்ரக்ஷயம். வைராக்யம் [illegible] கொள்ளக்கூடியது. ஆகையால் இப்படிப்பட்ட [illegible] ஸாபிப்பானோ; வைராக்யத்தை முன்னிட்டுக் கொண்டு [illegible] அவ[illegible] [illegible] எங்கு கவிசொன்னார். [illegible]ரூபமான உபத்ரவம் உண்டானால், கொஞ்சம் கரையை வெட்டி, ஜலத்தை வெளிப்படுத்தினால் தடாகம் காப்பாற்றப் படும். அவ்வண்ணமே ஹ்ருதயமானது சோகத்தால் கலக்க மடைந்தபோது ப்ரலாபத்தால் தான் அதை ஸ்திரப்படுத்தக்கூடும். ப்ரலாபந்தான் ஸாதுக்களான விப்ரர்களுக்குத் தத்காலம் மிகுந்த தொழில். வைதிகஸம்ப்ரதாயம் அவர்களோடு லோபத்தை அடையவேண்டிய தசையில் நிற்கின்றது. குருபாண்டவ வம்சம் நாசத்தையடைந்து விட்டதாக யாவரும் நினைக்கத்தக்க அவஸரத்தில் அதற்கு ஸந்தாநபீஜமொன்றை உண்டாக்கக்கருதி, கர்ப்பத்தில்அஸ்திரதக்தமாய்ப் போன கரிக்கட்டையை ஒரு சிசுவாகப் பண்ணிய சரண்யன், ஸ்வோப்திஷ்டமான வைதிக ஸம்ப்ரதாயங்களுக்கு ஒருஸந்தாந பீஜத்தை எங்கேயாவது மீற்றிவைப்பனோ? அந்த ஸம்ப்ரதாயம் ப்ராஹ்மணர்களை ஆச்ரயித்துநிற்பதால், விப்ரக்ஷயத்துக்காகக் குறுகிய இக்காலத்தில். எங்கேயாவது ச்ரோத்ரியர்களின் ப்ரஹ்ம வித்துக்களைக் காப்பாற்ற க்ருபை செய்வனோ?

இந்த விஷயங்களைப்பற்றி அடுத்த மாதஸஞ்சிகையில் யோசிப்போம்.

திருவெவ்வுளூர். தி. த. ரங்காசார்யர்.

ஸ்ரீ:

# ம னு ஸ் மி ரு தி.

விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸார ஸர்வஸ்வ வேதிநே ।
[illegible] ॥

1. ஸ்ரீமனு ஸ்ம்ருதி யென்கிற புராதன தர்மசாஸ்திரமானது ஜகத்ஸ்ருஷ்டிகர்த்தாவான சதுர்முகனால் தமது புத்திரரான ஸ்வாயம்புவ மனுவுக்கு உபதேசிக்கப்பட்டதாகவும் அம்மனுவினால் மரீசி ப்ருகு முதலான மஹர்ஷிகளுக்கு உபதேசிக்கப்பட்டதாகவும், ப்ருகுவினால் அனேக மஹர்ஷிகளுக்கு உபதேசிக்கப்பட்டதாகவும் 'இதம் ஶாஸ்த்ரம் து க்ருத்வாஸௌ மாமேவ ஸ்வயமாதித: । விதிவத் க்ராஹயாமாஸ மரீச்யாதீம்ஸ்த்வஹம் முநீந் । ஏதத்வோऽயம் ப்ருகு: ஶாஸ்த்ரம் ஶ்ராவயிஷ்யத்யஶேஷத: ॥' என்னும் முதல் அத்யாய ச்லோகங்கள் தெரிவிக்கின்றன.

2. 'அநந்தா வை வேதா:' (வேதங்கள் எண்ண முடியாதவைகள்) என்கிற காடகவாக்யத்தின்படியே அளவில்லாத வேதவாக்யங்களில் இவ்வுலகில் தற்காலம் அப்ரஸித்தங்களாயும், கிலங்களாயும், நம்மால் அத்யயனம் செய்யப்படுவதாயு மிருக்கிற வேதங்களை யெல்லாவற்றையும் தமது தபோமகிமையினால் ஸாக்ஷாத்கரித்து ஸம்ஸாரி சேதனர்களான நாம் அறிந்து அனுஷ்டித்து உஜ்ஜீவிக்கும்படி மஹாத்மாவான மனுப்ரஜாபதி அதிக விஸ்தாரமில்லாமலும் அதிக ஸங்க்ரஹமில்லாமலும் இந்த ஸ்ம்ருதி ரூபமான க்ரந்தத்தை அருளிச்செய்தார். இவ்வார்த்தை 'ய: கஶ்சித் கஸ்யசித் தர்மோ மநுநா பரிகீர்த்தித: । ஸ ஸர்வோऽபிஹிதோ வேதே ஸர்வஜ்ஞாநமயோ ஹி ஸ: ॥' என்கிற ச்லோகம் பரக்கப்பேசுகிறது.

3. இந்த ச்லோகமானது வேதத்தில் இருக்கும் விஷயங்களையே மனு கிரந்தத்தில் சொல்வதாக நிரூபிப்பதால் ஆஸ்திகர்களுள் அனைவரும் இதை அங்கீகரித்து அனுஷ்டிக்க வேண்டியதோடு ஏதோ சில வேதவாக்யங்களை வாக்யங்களை மட்டும் அறிந்த சிலர் 'ஸ்ம்ருதிகளில் காணப்படும் விஷயங்கள் வேதத்தில் இல்லை' யென்கிற கூச்சலை அநாதரிக்க வேண்டியதும் அவச்யம்.



4. இந்தக் கிரந்தமானது – 'யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை' என்கிற உபநிஷத்தின்படியே ஶ்ரிய:பதியினால் ப்ரும்மதேவனுக்கு உபதேசிக்கப்பட்ட ஸாரமான சாஸ்திரார்த்தமானதினாலும், பிறவியென்னும் வியாதியினால் பீடையடைந் மானிடர்க்கு மனுமொழிந்த தெல்லாம் மருந்து, 'யத்வை கிஞ்ச மநுரவதத் தத் பேஷஜம்' என்று வேதமே இந்த ஸ்ம்ருதியைக் கொண்டாடி இருப்பதாலும், 'வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்மஶாஸ்த்ரேஷு மாநவம்', '(வேதங்களுக்குள் புருஷ ஸூக்தம் உயர்ந்தது – தர்மசாஸ்திரங்களுக்குள் மனுஸ்ம்ருதி உயர்ந்தது) என்றும், 'மந்வர்த்த விபரீதா யா ஸா ஸ்ம்ருதிர் ந ப்ரஶஸ்யதே' (மனுஸ்ம்ருதிக்கு விருத்தமான மற்றைய ஸ்ம்ருதிகள் அங்கீகரிக்கக் கூடாதவைகள்) என்று மற்ற மகர்ஷிகளே சொல்வதாலும், ப்ரும்ம ஸூத்திரத்திற்கு பாஷ்யம் பண்ணின ஸ்ரீசங்கராசாரியர், ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீஆநந்த தீர்த்தர், முதலான அனைவரும் ஸ்ம்ருத்யதிகரணத்தில் இந்த மனுஸ்ம்ருதியை ப்ரமாணதம மென்று பலவாராகப் புகழ்ந்து பேசுவதாலும், 'யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி ந தத் க்வசித்' (இந்த கிரந்தத்தில் இருக்கும் விஷயங்கள் தான் மற்றைய கிரந்தங்களில் இருக்கின்றன; இதில் இல்லாதவை மற்றதில் இல்லை) என்கிறபடியே இது ஸர்வ அர்த்தங்களையும் சுறுங்கத்தெளிவாக உரைப்பதாலும், இந்த க்ரந்தத்தின் மஹிமை மனதாலும் நினைக்கமுடியாதது.

5. இந்த க்ரந்தத்தில் 'ஸோऽபித்யாய ஶரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவிதா: ப்ரஜா:' (ஸர்வேச்வரன் தமது தேஹத்திலிருந்து பலவிதமான ப்ரஜைகளை உண்டுபண்ண நினைக்கிறான்). என்று இவ்வுலகை ஈச்வரன் உண்டுபண்ணினதாகச் சொல்வதாலும், 'மஹாபாதகிநோ வர்ஷகணாந் கோராந் நரகாந் ப்ராப்ய தத்க்ஷயாத் । ஸம்ஸாராந் ப்ரதிபத்யந்தே [illegible] ॥' (மஹாபாபம் செய்தவர்கள் நெடுங்காலம் பயங்கரமான நரகதுக்கங்களை அடைந்து பிறகு இந்த ஸம்ஸாரத்தில் பலபிறவிகளை அடைகிறார்கள் என்று சில கார்யங்களுக்குப் பாபம் என்று பெயரிட்டு அதைச்செய்தால் நரகம்முதலான கஷ்டம் வருமென்பதாலும், '[illegible] நித்யம் ஸஞ்சிநுயாத் [illegible]' (ப்ரதிதினமும் புத்திமானனவன் புண்ணியத்தையே ஸம்பாதிக்க வேண்டியது) என்கிறபடியே புண்யமென்று சாஸ்த்ரம் சொன்ன கர்மங்களையே செய்ய விதிக்கையினாலும், உலகத்தை ஈச்வரன் ஸ்ருஷ்டிக்காமல் இயற்கையாய் இருக்கிற தென்று விஷயாநுபவமே

புருஷார்த்தமாய் ஊனேறு செல்வத்துடன் பிறந்து உண்டியே உடையே உகந்து பெண்டிரால் சுகங்களுய்க்கும் பாச்சாத்திய நாகரீகமாகிற நாஸ்திக்ய மதத்தை நிராகரிக்கிறது.

6. தத்காலத்திய நூதனவைதிக மதமென்று சில நாஸ்திகர் விரும்பும் ஆர்யஸமாஜம்முதலான சிலமதாபாஸங்களினுல் அங்கீகரிக்கப்படாத புண்யதேசங்களையும், புண்யதீர்த்தங்களையும், பித்ருஶ்ராத்தங்களையும், தேவாலயங்களில் பிரதிமாபூஜனங்களையும், '[illegible]', '[illegible]', '[illegible]' என்றும் 3-ம் அத்யாயத்தில் பித்ருச்ராத்தத்தையும் பரக்க நிரூபிப்பதால் பசுநிறை நடுவில் பசுத்தோலைப்போர்த்து மேயும் புலிபோன்ற புறச்சமய வாதத்தை நிராகரணம் செய்கிறது.

7. உபநிஷத்துக்களில் 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம', 'அயமாத்மா ப்ரஹ்ம', 'தத்வமஸி', 'நேஹ நாநாஸ்தி கிஞ்சந' என்பதுபோல உலகமெல்லாம் ப்ரும்மமே யென்றும், நீ ப்ரும்மமே யென்றும், ஸத்யமான வஸ்துவில்லை யென்றும், இவ்வாறு சிலர்க்கு ஸந்தேஹிக்கக் காரணமான சப்தப்ரயோகங்களை ஸ்வாஸநமாகத் துலைத்து, மித்யையையே மித்யையாக்கி ஸத்யமான 4-ஜாதியையும் அவற்றின் தர்மங்களையும் ஸங்கர ஜாதிகளையும் அவற்றின் தர்மங்களையும், 'ஸர்வேஷாம் து ஸ நாமாநி கர்மாணி ச ப்ருதக் ப்ருதக் । வேதஶப்தேப்ய ஏவாதௌ ப்ருதக் ஸம்ஸ்தாஶ்ச நிர்மமே ॥' என்று விஸ்தாரமாக விளம்புவதாலும், நிர்க்குண ப்ரும்மத்தை நெஞ்சால் நினைக்காமல் நற்குணங்கள் நிறைந்த நாராயணனையே ஜகத்காரணமாகக் கருதுவதாலும், சித், அசித், ஈச்வரன் என்னும் மூன்று தத்வங்களை, 12-ம். அத்யாயத்தில் 'யோऽஸ்யாத்மந: காரயிதா தம் க்ஷேத்ரஜ்ஞம் ப்ரசக்ஷதே । ய: கரோதி து கர்மாணி ஸ பூதாத்மோச்யதே புதை: ॥ ஜீவஸம்ஜ்ஞோऽந்தராத்மாऽந்ய: ஸஹஜ: ஸர்வதேஹிநாம் । யேந வேதயதே ஸர்வம் ஸுகம் து:கம் ச ஜந்மஸு ॥ தாவுபௌ பூதஸம்ப்ருக்தௌ மஹாந் க்ஷேத்ரஜ்ஞ ஏவ ச । உச்சாவசேஷு பூதேஷு ஸ்திதம் தம் வ்யாப்ய திஷ்டத: ॥' என்று தத்வங்களின் பேதங்களைத் தன்னியரும் தெளிவாக அறியும்படி வியாவஹாரிகம் ப்ராதிபாஸிகம் என்கிற பொய்யான பேதமில்லாமல் மெய்யான பேதத்தைப் பலவிடங்களிலும் பலவாராகப் பேசுவதாலும் இது அத்வைத மதத்திற்கு அடியோடு விருத்தமானது.



8. இதில் ஜீவாத்ம ஸ்வரூபத்தில் பேதத்தைச் சொல்லாமல் 'வாசிகை: பக்ஷிம்ருகதாம் மாநஸைரந்த்யஜாதிதாம் । ஶரீரஜை: கர்மதோஷைர்யாதி ஸ்தாவரதாம் நர: ॥' என்று வாயினுல் செய்த பாபங்களில் பயனுக பக்ஷி ம்ருக ஜன்மங்களையும் மனதினுல் செய்யப்படும் பாபங்களின் பலனுக சண்டாளஜன்மத்தையும், தேகத்தினுல் செய்யப்படும் பாபங்களின் பயனுக மரம் செடிகளான தேகத்தை யெல்லா ஜீவன்களும் அடைவதாகச் சொல்வதாலும், மோக்ஷத்தில் ஆநந்த தாரதம்யத்தைச் சொல்லாமல் 'பராம் கதிம்', 'ப்ரஹ்மண: பதம்', 'ஸ்வாராஜ்யம்' என்னும் உயர்ந்த ஆநந்தமென்றும், பிரம்மத்தின் ஸ்தாநமென்றும், தன்னிஷ்டப்படி இருப்பதென்றும், ஒரேமாதிரியாக உரைத்திடுவதால். ஆத்ம ஸ்வரூபத்தில் பேதத்தையும் மோக்ஷாநுபவத்தில் பேதத்தையும் அங்கீகரித்திருக்கும் - மத்வமதத்திற்கு மனுஸ்மிருதி முக்கியமாக விருத்தமானது.

9. இம்மனுஸ்ம்ருதியில் சைவத்தில் ப்ரஸித்தமான பசு பாசம்முதலான சப்தங்கள்கூட சொல்லப்படாததினுலும் பரமசிவன் பிதாவான ப்ரும்மதேவன் ஶ்ரியஃபதியால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவனுக 'தத்விஸ்ருஷ்ட: ஸ புருஷோ லோகே ப்ரஹ்மேதி கீர்த்யதே' என்று சொல்லப்படுவதாலும், '[illegible] மதயோ ப்ரஹ்மாத்யா [illegible] । ப்ரஹ்மா விஶ்வஸ்ருஜோ தர்மோ மஹாநவ்யக்தமேவ ச ॥ உத்தமாம் ஸாத்விகீமேதாம் கதிமாஹுர்மநீஷிண: ॥' என்று சதுர்முக ஸ்தாநத்தைக் கர்மவிசேஷத்தினுல் அடையப்படுவதாகச் சொல்வதாலும், 'யா வேதபாஹ்யா: ஸ்ம்ருதயோ யாஶ்ச காஶ்ச குத்ருஷ்டய: । ஸர்வாஸ்தா நிஷ்பலா: ப்ரேத்ய தமோநிஷ்டா ஹி தா: ஸ்ம்ருதா: ' என்று நாராயணனையே ஜகத் காரணமாகச் சொல்லும் இந்தமனுஸ்ம்ருதிக்கு விருத்தமான மற்றைய மதங்கள் அவைதிக மென்றும் தாமஸமென்றும் சொல்லப்படுவதால் பாசுபதம் முதலான மற்றைய மதங்கள் மனுப்ராஜாபதிக்கு அநபிமதங்கள் என்று நிச்சயிக்கப்படுகிறது.

10. இப்படியானுல் இம்மனுஸ்ம்ருதியை அடியிலிருந்து முடிவு வரையிலும் பக்ஷபாதமில்லாமல் பார்க்கும் புத்திமான்களுக்கு 'தேந நாராயண: ஸ்ம்ருத: ' என்று ஆரம்பித்து ஜகத்காரணம் நாராயணனென்கையினுலும், 'ஸோऽபித்யாய ஶரீராத் ஸ்வாத்' என்றும், '[illegible] ஶரீரத: ' என்றும் சொல்லுகிறபடியே உலகனைத்துக்கும் அவனுக்கும் சரீராத்மபாவ ஸம்பந்தத்தைச் சொல்வதாலும், 'நித்யம்ஸ்தித

[illegible]' என்று அவனை நிர்க்குணமாகச் சொல்லாமல், சர்வஜ்ஞனாகச்சொல்வதாலும், '[illegible]' என்று அவனையே யாவருக்கும் சிக்ஷகனாகச் சொல்வதாலும், '[illegible]' என்று அப்ராகிருத தேஹமுடையவனாகச் சொல்வதாலும், '[illegible] ॥' என்றும், '[illegible]' இத்யாதிகளினால் மோக்ஷமடையும் ஜீவாத்மா நல்லவழியினால் சென்று - பரப்ரும்ம ஸ்தானத்தை அடைவதாகச் சொல்வதாலும், அதற்கு முக்கியகாரணம் '[illegible]' என்று பக்தி யோகத்தையே சொல்வதாலும், அங்கு சென்றவனுக்கு ஆனந்தபேதமில்லாமல் '[illegible]', '[illegible]', '[illegible]' இம்மாதிரியான சப்தங்களினால் ப்ரும்மத்துடன் ஸமான ஸுகாநுபவம் சொல்லுகையினாலும், கீழ்ச்சொல்லப்பட்ட '[illegible]' என்கிற ச்லோகத்தின்படி ஸர்வவேத ஸாரமான இந்த ஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட விஷயங்களைச் சேர்த்து விசிஷ்டாத்வைத மெனப் பூர்வாசார்யர்கள் பெயரிட்டு வைத்தார்கள் என்பது நன்கு விளங்கும்.

11. இவ்விஷயத்தைப் பரமாத்வைதியான குள்ளூகப்பட்டரும் '[illegible]' என்கிற ச்லோக வியாக்யானத்தில் '[illegible]' (மனுவுக்கு ஸ்ரீபாஷ்யகாரருடையமதமே இஷ்டமானது) என்று எழுதினர்.

12. இவ்வாறு உலகமெல்லாம் ஸத்ய மென்று ஒப்புக்கொண்டு அநந்தங்களான ஜீவர்களுடைய ஸ்வரூப பேதத்தையும், அவரவர் புண்ய பாபாநுகுணமாக தேகபேத மடைவதையும், சுவர்க்க சுகத்தையும், நரகதுக்கத்தையும், இதன் சாதனங்களான வர்ணாச்ரம பேதத்தையும், நிஷ்காம கர்மபூர்வமான ப்ரும்மத்யானத்தினால் பக்த ப்ரும்மப்ராப்தியான மோக்ஷ ஸுகத்தையும் தெளிவாக உபதேசித்து ஆத்மாக்களை உஜ்ஜீவிப்பிக்கும் இந்த ஸ்ம்ருதிரத்நத்தை இவ்வர்த்த மெல்லாம் மித்யை யென்று சொல்லும் மாயாவாதிகளும், புருஷோத்தமன் பாதம் பணிந்து வாழும் பாக்கியமில்லாத பிக்ஷுக்களைப்போற்றிப் பயன்பெறும் பாசுபதர்களும், தங்கள் மதத்திற்கு அநுகூலமென்று கொண்டாடுவது பொருந்தா தென்பதைப் புத்திமான்கள் கவனிப்பார்களாக.

ஸ்ரீரங்கம், 30—3—23. } புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

# ஸம்வர்க்க வித்யையின் கதை.

முன்காலத்தில் புத்ரர் என்று பேர்கொண்ட ஒரு ரிஷி இருந்தார். அவர் ராஜரிஷி. அதாவது அரசனும் ரிஷியாயும் இருந்தவர். க்ஷத்ரியகுலத்தில் உதித்து வம்சபரம்பரையாக வந்த ராஜ்யத்தைப் பரிபாலித்துக்கொண்டு தவம் செய்து மிகவும் ஜ்ஞானியாயிருந்தார். அவருக்கு ஜநச்ருதர்என்று ஒருகுமாரன் உண்டு. ஜநச்ருதர்என்றால் ஜநங்களால் கேழ்கப்பட்டவர் என்று அர்த்தம். அதாவது தபோமஹிமையிலும் ஒழுங்காய் ராஜ்யபரிபாலநம் செய்வதிலும் ஜநங்களால் கொண்டாடப்பட்டவர். அந்த ஜநச்ருதருக்கு ஒருபுத்திரன் பிறந்தான். அவனுக்கு ஜாநச்ருதி என்றே பெயர். ஜாநச்ருதி என்றால் ஜநச்ருதியின் புத்திரன் என்று அர்த்தம். அந்த ஜாநச்ருதி, யாசகர்களுக்கு விசேஷமாகக் கொடுப்பவன், ச்ரத்தையுடன் கொடுப்பவன். அந்தவரசன், தன்னுடைய ராஜ்யம் முழுவதும், அநேக ஸத்திரங்களைக் கட்டிவைத்தான், ஒவ்வொரு கிராமங்களிலும் பட்டணங்களிலும், வழிகளிலும், காடுகளிலும், கணக்கில்லாத ஸத்திரங்களைக் கட்டிவைத்தான். அநாதர்களான வழிப்போக்கர்களில் பனியினால் வருந்துமவர்க்குக் கம்பளி முதலியவற்றைக் கொடுத்து உபசரித்தான். மழை வெயில்களினால் கஷ்டப்படுவர்க்கு குடை முதலியவைகளைக் கொடுத்து உபகாரம் செய்தான். பசித்தவர்களுக்கு அன்னமிட்டுவித்தான். தாகமுள்ளவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பித்தான். படுக்கப்பாய் இல்லாதவர்களுக்குப் பாய் தலையணை முதலியவற்றைக் கொடுப்பித்தான். உடுக்கவஸ்திரம் இல்லாத ஏழைகளுக்கு வஸ்திரங்களைக் கொடுப்பித்தான். அநேகதிக்குகளில் இருந்துவருகிற அதிதிகள் தன்னுடைய அன்னத்தைச் சாப்பிடவேண்டும் என்றும், அநேக அதிதிகளில் ஒருவர் மகாத்மாவன யோகீச்வரராய் இருக்கக்கூடும் என்றும், அதன்வழியாக அந்த மகாத்மாக்களின் பரிசயம் தனக்கு உண்டாகும் என்றும் அதனால் தான் வேதாந்த அறிவை அடையலாம் என்றும், ஜாநச்ருதியின் கருத்து. அவன் கருத்துக்கிணங்கியே அநேக மகான்கள் அவனுடைய தர்மம் செய்யும் குணத்தைக்கண்டு மகிழ்ந்தார்கள். சில மகான்கள் இவனுடைய தர்ம ஸத்திரங்களில் நடக்கும் உபசாரங்களைக் கண்டு மிகவும் மனம்மகிழ்ந்தவர்களாய் ஒருநாள் இராத்திரியில் அன்னபக்ஷிகளின் உருவங்கொண்டு ஜாநச்ருதியின் இருப்பிடம் வந்தார்கள். அவன் கண் முன்பாக வந்து ஒருவரோடொருவர் பேசத்தொடங்கினார்கள். வரிசையாகப் போய்கொண்டிருந்த அன்னபக்ஷிகளில் முன் பக்ஷியைப் பார்த்துப் பின்பக்ஷி பின்வருமாறு சொல்லிற்று. "ஓ! பல்லாக்ஷமே! புத்திரர் என்ற அரசனுடைய பேரனும், ஜநச்ருதியின் புத்திரனுமாகிய இந்த

அரசனுடைய ஒளியானது சூரியனுடைய ஒளிபோல் எங்கும் பரவி நிற்கின்றது. ஸ்வர்க்கலோக பர்யந்தமும் அளாவியுள்ளது. அது உன்னை எரிக்காமல் இருக்கும் பொருட்டு அதனருகில் செல்லாதே, அருகில் சென்றால் அவனுடைய ஒளி உன்னை எரித்துவிடும்’—என்றது.

இப்படி ஜாநச்ருதியின் ஸ்துதி ரூபமாகிய இந்த ஹம்ஸத்தின் வார்த்தையைக்கேட்டு, மற்றொரு ஹம்ஸம் ஜாநச்ருதியின் ஸ்துதியில் பொறாமைகொண்டதுபோலப் பின்வருமாறு பதில் சொல்லிற்று. ‘அடா! ஹம்சமே!ஜாநச்ருதிக்கு என்ன மகிமைஇருக்கிறது? பரமாத்மாவை உள்ளபடி அறிந்த மஹாத்மாவாகிய ரைக்வரைப்போலே ஜாநச்ருதியை ஸ்துதிசெய்கின்றாயே! ப்ரும்மஜ்ஞானம் இல்லாதஇவனுக்குஒளிஏது?’.என்று. இதுகேட்டுப் பின்வருகிறஹம்ஸம் சொல்லுகிறது. ‘அந்தரைக்வர் எப்படிப்பட்டவர்? அவருடையமகிமை எப்படிப்பட்டது? அவருடைய ஜ்ஞானம் எப்படிப்பட்டது? என்பதை விளங்கச்சொல்லு’ என்றது. மற்றொரு ஹம்ஸம் சொல்லுகின்றது. ‘ஓ! ஹம்ஸமே! மஹாத்மாவாகிய ரைக்வரின் மஹிமையைச்சொல்லுகிறேன், ஜாக்ரதையுள்ள மனத்துடன் கேள்’ என்று.

‘ரைக்வருடைய ஜ்ஞானத்திற்கு அளவுஇல்லை. அவருக்குத் தெரியாத விஷயமொன்றும் இல்லை. ரைக்வருக்குத் தெரிந்ததுதான் மற்றவர்களுக்குத் தெரியும். ரைக்வருக்குத் தெரியாதது மற்றவர்களுக்குத் தெரியாதது. உலகத்தில் ஜனங்கள் எவ்வளவு நல்ல புண்ணிய கர்மங்களைச் செய்கின்றார்களோ அவையெல்லாம் ரைக்வருடைய ஜ்ஞானம் கர்மம் இவைகளில் அடங்கியவைதான். [இதன் கருத்து என்னவென்றால் ரைக்வர் ப்ரும்ம ஜ்ஞானத்தில் சிறந்தவராதலால் உலகத்தில் எல்லா ப்ரஜைகளும் செய்யும் புண்ணிய கர்மங்களின் பலங்களை இவர் ப்ரும்மத்யானத்தினால் அடைகிறார். அல்லது, ஸ்ரீபகவத்கீதையில் ‘[illegible]’ என்று சொல்லுகிறபடியே ரைக்வர் கர்மயோகத்தை விடாமலே ஜ்ஞானயோகாப்யாஸம் செய்கிறார் என்றும் மற்றவர்கள் செய்யும் நித்யம் நைமித்திகம் காம்யம் என்று மூன்றுவிதமான கர்மங்களின் பலங்கள் எல்லாம் ரைக்வர் செய்கிற ஜ்ஞானயோகாப்பியாஸத்தில் அடங்கியவை என்றும் கருத்து.] அவ்வளவு விசேஷ மஹிமையுள்ள ரைக்வரை நான் உனக்கு இப்போது சொன்னேன்’ என்றது. இவ்விதம் சொல்லிக்கொண்டே அந்தப் பக்ஷிகள் ஆகாயத்தில் பறந்து போயின.

இந்த வார்த்தையைக் கேட்டு ஜானச்ருதி, ப்ரும்மஜ்ஞானச் சிறப்பினால்ரைக்வருக்கு விசேஷ மஹிமையும், ப்ரும்மஜ்ஞானமில்லாததால் தனக்கு மஹிமை இல்லாமையோடு ஸ்வரூபஹானியும் உலகத்தில் ஜனங்களால் சொல்லப்படுகின்றன என்று அறிந்து கொண்டான்.



அதுகேட்டு ஜானச்ருதி மிகவும் தன்னை வெறுத்துக் கொண்டான். ஐயோ! பாவம்! அநேக கோடி ஜன்மங்கள் ஒரு ப்ரயோஜனமும் இல்லாமல் கழிந்தன. ஸ்ரீபகவானுடைய பாதாரவிந்தங்களை ஒருதரம்கூடப் பூஜிக்கவில்லை. தர்மசாஸ்திரங்களில் சொல்லியபடி குருகுல வாசம் செய்து குருக்களுக்குப் பணிவிடைசெய்து, அவர்களின் கிருபையினால் தெரிந்துகொள்ள வேண்டிய தத்வஹித புருஷார்த்தங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. இனிமேலாவது இவ்விதம் வியர்த்தகாலம் கழிக்காமல் ஒரு ஆசார்யனைத்தேடி அடுத்து ப்ரும்ம ஸ்வரூபத்தையும் ப்ரும்ம ப்ராப்தியின் உபாயத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தான்.

இந்த ஹம்ஸங்கள் நடுராத்திரியில் வந்து போயின. ஹம்ஸங்கள் வந்து போயினபிறகு ஜானச்ருதிக்கு நித்திரை பிடிக்கவில்லை. விழித்த கண்ணுடன் த்யானம் செய்துகொண்டிருந்தான். ஹம்ஸங்கள் தன்னை நிந்தித்ததை நினைத்து வெட்கமடைந்தான். அதனால் துக்கமும் வெறுப்பும் அவனுக்கு உண்டாயின.

இவ்விதம் ஜானச்ருதி பலவிதமாய் விசாரப்பட்டுக் கொண்டிருக்கும் போது பொழுது விடிந்தது. ஜானச்ருதிக்கு அந்த இராத்திரி நூறு யுகம் போல் வளர்ந்தது. பொழுது விடிந்ததும் ஜானச்ருதி மகாஸந்தோஷம் அடைந்தான். படுக்கையை விட்டு எழுந்ததும் தன்னுடைய அந்தப்புரத்தின் காவற்காரர்களில் ஒருவனைக் கூப்பிட்டு இராத்திரியில் நடந்த ஹம்ஸங்களின் ஸம்பாஷணையைத் தெரிவித்தான். தெரிவித்தபிறகு ஹம்ஸங்களால் சொல்லப்பட்ட மகானுபாவனான ரைக்வரைத் தேடிக் கொண்டு வா என்று கட்டளையிட்டான்.

அந்த அந்தப்புர வேலைக்காரனும் அநேக கிராமங்களிலும் பட்டணங்களிலும் ரைக்வரைத் தேடிப்பார்த்து அகப்படாமையால் திரும்பிவந்து ஜானச்ருதியினிடம் ரைக்வர் அகப்படவில்லை என்று சொன்னான்.

ஜானச்ருதி, அந்த வேலைக்காரனைப் பார்த்து ‘ரைக்வர், பட்டணங்களிலும் கிராமங்களிலும் அகப்படமாட்டார். ஜன சஞ்சாரம் இல்லாத நதிதீரங்களிலும் வனங்களிலும் மலைகளிலும் தேடவேண்டும். ஏன் என்றால் ரைக்வர் ப்ரும்மஜ்ஞானி ஆதலால் அவருக்கு நகரவாசமும் கிராமவாசமும் ருசிக்காது. ரிஷிகள் தபம் செய்யக்கூடிய இடங்களிலேயே இருக்கக்கூடும்’ என்று சொன்னான். ஜானச்ருதியின் சொற்படியே வேலைக்காரன் ரிஷிகள் தபம்செய்யும் வனங்களில் தேடிக்கொண்டு போனான். கடைசியில் ஒரு வனத்தில் வண்டியின் கீழ் உட்கார்ந்துகொண்டு சரீரத்தில் தினவு தேய்த்துக்கொண்டிருந்த ரைக்வரைப் பார்த்தான். ரைக்வர் எப்பொழுதும் வண்டியின் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பார் என்று அந்தப்புர வேலைக்காரன் கேட்டிருந்

தபடியால் இவர் ரைக்வராக இருக்கக்கூடும் என்று ஊஹம் கொண்டு, அவர் அருகில் தானும் உட்கார்ந்தான். ரைக்வர் நீரோ? என்று கேட்டான். அவரும் தான் ரைக்வர் என்று பதில் சொன்னார். அதுகேட்டு மிகவும் சந்தோஷமுற்ற மனதுடன் அந்தத் தூதன் ஜானச்ருதியினிடம் சென்று ரைக்வரைக் கண்டேன் என்று சொன்னான். அதுகேட்ட உடனே ஜானச்ருதி அறுநூறு பசுக்களையும் மிகவும் விலையுயர்ந்த கழுத்தில் அணிந்துகொள்ள வேண்டிய ஆபரணம் ஒன்றையும், ஒருபெண்குதிரை கட்டிய இரதத்தையும் எடுத்துக்கொண்டு ரைக்வரிடம் சென்றான். தபோவனத்தில் ரைக்வரைப் பார்த்து வணக்கமாய் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கைகளைக் குவித்துக் கொண்டு பின்வருமாறு ப்ரார்த்தித்தான்.

'ஓ! மஹாத்மாவாகிய ரைக்வரே! அறுநூறு பசுக்களும், விலையுயர்ந்த ஆபரணம் ஒன்றும், பெண்குதிரை கட்டியரதம் ஒன்றும், இதோ கொண்டு வந்திருக்கிறேன். கிருபை செய்து இவைகளைப் பெற்றுக்கொள்ளவும். நீர் எந்தத் தேவதையை உபாஸனை செய்கிறீரோ அந்தத் தேவதையை எனக்கு உபதேசம் செய்ய வேண்டும்' என்றார்.

அதுகேட்டு ரைக்வர் ஜானச்ருதியைப் பார்த்து பதில் சொல்லுகிறார்.

'அடே சூத்ரனே! இந்தப் பசுமாடுகளும் ஆபரணம் ஒன்றும், ரதமும் உனக்கே இருக்கட்டும். எனக்குக் கிராமமில்லை. வீடு இல்லை. பார்யை இல்லை; இப்படியிருக்க இந்தப்பசு முதலியவற்றை எப்படி காப்பாற்றுவேன்' என்றார்.

அதாவது, ரைக்வர் தபோமஹிமையினால் முன்விருத்தாந்தங்களை அறிந்தார். இவன் ப்ரும்மஜ்ஞான மில்லாமலிருப்பதும், ஸத்திரங்கள் கட்டிவைத்ததும், சிலமஹான்கள் ஹம்ஸரூபியாய் வந்து இவனுக்கு சொன்னதும், அதுகேட்டு இவனுக்கு ப்ரும்மஜ்ஞானம் ஸம்பாதிக்க வேண்டுமென்ற ஆவல் உண்டானதும், அநேக ஜன்மங்கள் நிஷ்பலமாய் கழிந்ததை நினைத்து இவனுக்குத் துக்கம் உண்டானதும், ப்ரும்ம வித்யையை உபதேசம் செய்யத் தக்க யோக்யதை ஜானச்ருதிக்கு இருந்த போதிலும், நீடித்தகாலம் அவன் மனதைப் பரிசோதனை செய்யாமல் உபதேசம் செய்தால் வேதாந்த வித்யை அவன் மனதில் நிலைத்து நிற்காது என்றும், இவை முதலிய விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு ரைக்வர் ஜானச்ருதியைப் பார்த்து இவ்விதம் சொன்னது என்று கருத்து.

ஜானச்ருதி மறுபடியும் ஆயிரம் பசுக்களும் ஆபரணங்களும் பெண்குதிரை கட்டிய ரதம் ஒன்றும் தன்னுடைய பெண்ணும் ஆகிய இவைகளை எடுத்துக்கொண்டு ரைக்வரிடம் சென்று ஸாஷ்டாங்கப்ரணாமம் செய்து பின்வருமாறு சொல்லுகிறார்:—



'இந்த ஆயிரம் பசுக்களையும் விலையுயர்ந்த ஆபரணத்தையும் ரதத்தையும், கல்யாணம் செய்துகொள்ளப் பெண்ணையும் பெற்றுக் கொள்ளுங்கள் எனக்கு ப்ரும்மவித்யையை உபதேசம் செய்யவேணும்'—என்று.

இப்படிச் செய்ததனால் ஜானச்ருதிக்கு ப்ரும்மவித்யையைக் கேட்கவேண்டுமென்று ஆவல் அதிகமாக இருப்பதாக அறிந்த ரைக்வர் பின்வருமாறு ஸம்வர்க்க வித்யையை உபதேசம் செய்தார்.

'வாயுதேவதைக்கு அந்தர்யாமியாய் இருக்கிற பரமாத்மாவை ஸம்வர்க்கம் என்பார்கள். ஸம்வர்க்கம் என்றால் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்க்கிறது என்று அர்த்தம். எல்லாவஸ்துக்களும் ப்ராணவாயு ரூபியான பரமாத்மாவை ஆஸ்ரயித்துத் தரித்திருக்கிறபடியால் அந்த வாயுரூபியான ஸம்வர்க்க தேவதையே பரமாத்மா. அதைத்தான் உபாஸனை செய்யவேண்டும். நான் அதை உபாஸிக்கிறேன். நீயும் அதை உபாஸித்தால் நல்லகதி அடையலாம்'—என்று.

புரசைபாக்கம். வெ. அநந்தாசார்யர்.

# யாகம்.

—

பொதுவாக எல்லாஜநங்களும் ஜீவஹிம்ஸை செய்யக்கூடாது என்று தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஏன் ஜீவஹிம்ஸை செய்யக்கூடாது என்று கேட்டால் அது பிறருக்குக்கஷ்டத்தை உண்டுபண்ணுகிறபடியால் பாபம் என்றும், அயலாருக்கு சுகத்தை கொடுக்கக்கூடிய அந்நாதிகளைக் கொடுப்பது புண்ணியமென்றும் சொல்லுகிறார்கள். இவர்கள் கேவலம் ப்ரத்யக்ஷத்தை மாத்திரமே அநுஸரித்துச் சொல்லுகிறவர்கள். இவர்கள் சொல்லுகிறபடி கவனித்தால் பல விபரீதங்களை ஒப்புக்கொள்ள வேண்டிவரும். நாம் ஒருவனுக்கு அன்னம் விசேஷமாய் அளிக்குங்காலத்தில் மற்றொருவன் அதைப் பார்த்துப் பொறாமைப்பட்டு ஸங்கடப்படுகிறான். அதற்காக ப்ரத்யக்ஷமான போஜன சுகத்தை நாம் நிறுத்திவிடுகிறோமா? ப்ரத்யக்ஷத்தையே ப்ரதானமாகப் பற்றி ஸுகத்தை கொடுக்கக்கூடியது புண்யமென்று சொன்னால், மகாபாதகங்களெல்லாம் புண்யமென்று சொல்லவேண்டிவரும்.

வேறுசிலர், 'வேதங்களிலும் சாஸ்திரங்களிலும்' 'ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி' என்று சொல்லியிருக்கிறது; ஆகையால் நாம் ஒருவரையும் ஹிம்ஸிக்கக்கூடாது' என்பார்கள், இப்படிப்பட்டவர்கள் யாகம் செய்வது பசுஹிம்ஸை யானதால் அதைச் செய்யக்கூடாது என்கிறார்கள். இவர்களுடைய மதம் வைதிகாபாஸம் (வைதீகம்போல் தோன்றுகிறது); அதாவது

வேதத்தை அநேக இடங்களில் ஒப்புக்கொண்டு கடைசியில் அதை அப்ரமாணம் என்று சொல்லுகிறது. இதை 'அலங்க்ருத்ய சிரச்சேதம்' (அலங்காரம் செய்து தலையை வெட்டிவிடுதல்) என்று சொல்லலாம்.

யஜ்ஞங்கள் நடக்கிற ஸ்தலங்களையும் பார்க்காமல் மஹான்களுடைய ஸம்பர்க்கமும் நேராமல், புஸ்தகங்களைத்தா மாகவே பார்த்துவிட்டு அரைகுறையாகப் படிப்பதுதான் இப்படி ஸந்தேகத்துக்குக் காரணம். ஸந்த்யாவந்தனத்தைப்பற்றி ஒருவர் கொஞ்சம் திரவியம் செலவழித்து உபந்யாஸங்களை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் சிலபையன்கள் வந்தார்கள். வைதிகர்கள் இந்த விஷயம் அனுவசியமென்று ஒதுங்கிவிட்டார்கள். லௌகிகர்கள் இதில் அச்ரத்தையால் வருவதை நிருத்தி விட்டார்கள். மறுநாள் உபந்யாஸத்திற்கு பையன்களுடைய ஸங்கியை குறைந்தது. நாலுநாள் ஆனவுடன் ஒருவருமே வரவில்லை. லௌகிகர் ஒருவரை ஏன் உபந்யாஸத்துக்கு வரவில்லை என்று கேட்டதற்கு அவர் 'உபந்யாஸத்திற்கு வந்தால் பிறகு ஸந்தியாவந்தனம் செய்தே தீரவேணும் என்று தோன்றும்; அது ஸங்கடமாய்விடும்; தெரிந்துகொண்டு பண்ணாமலிருப்பது பிசகு. ஆகையால் போகவில்லை என்றார்!

ஸ்ருஷ்டிகாலம் முதற்கொண்டு அவிச்சின்ன ஸம்ப்ரதாயமாக நமக்குக் கிடைத்துவந்த வேதத்திலும் அதினுடைய அநுஷ்டாநங்களிலும் என்ன அநுபபத்தி வந்துவிட்டது? ப்ராசீனர்களான ரிஷிகளைக்காட்டிலும் அவர்களுடைய பூததயை முதலான ஆத்மகுணங்களிலாவது, பாண்டித்யத்திலாவது ஏதாவது ஒரு அம்சம் நமக்கிருக்கிறதாகத் தெரியவில்லை. யக்ஞோபவீதம் போட்டுக்கொள்ளும்போது 'ஶ்ரௌத ஸ்மார்த்த விஹித நித்யகர்மாநுஷ்டாந' என்று அனுவச்யமாய்ப் பொய்சொலகிறோம். ஜ்யோதிஷ்டோமம் முதலான ச்ரௌதகர்மங்கள் எதையும் அநுஷ்டிக்கிறதில்லை. ச்ருதியில் ஜ்யோதிஷ்டோமம் என்கிற யாகத்தினால் யஜ்ஞவராஹ மூர்த்தியான பகவானை ஆராதித்துக் கொண்டு அவனை த்ருப்திபண்ணும்படி சொல்லியிருக்கிறது. அதில் எத்தனையோ க்ரியாலாபங்களுக்கு நடுவில் சாக (ஆடு) த்தின் வபையை மந்த்ர புரஸ்ரமாய் ஹோமம் செய்யச்சொல்லி யிருக்கிறது. யாகம் என்றால் தேவதையை உத்தேசித்துச் செய்கிற த்ரவ்ய தியாகம் என்று அர்த்தம்.

மரணோத்தேச ப்ரவ்ருத்தமான அனுகூலவ்யாபாரத்தை ஹிம்ஸை என்று சொல்லலாமா என்றால், பசு மரணத்தையடைய வேண்டும் என்பது நம்முடைய உத்தேசம் அல்ல. அப்படியிருந்தால் அது வீதியில்போகும் போது ஒருவிதமான ஆடம்பரமு மன்றியில் அதைக் கொன்றுவிடலாமே? இவ்வளவு மந்த்ரதந்த்ர த்ரவ்ய ப்ரயாஸ ஸாத்யமான யாகத்தைச் செய்யவேண்டியதில்லை. ராஜா கொலைக்குற்றம் செய்தவனைத் தூக்குப்போட்டு விடும்படி ஆக்ஞாபிக்கிறான். இதைப் புண்யமென்று சொல்லுகிறோமே யொழிய ஹிம்ஸை



என்று சொல்லுகிறதில்லை. அதனால் ராஜா தர்ம பரிபாலநம் பண்ணுகிறான் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அக்நீ ஷோமீய விஷயத்திலோ வென்றால் அது தர்மமென்று ச்ருதி சொல்லிவிட்டது. அதில் நாம் ஒன்றும் யுக்தி வாதம் பண்ண வகையில்லை ஆகையால் 'நஹி வசந விரோதே ந்யாய: ப்ரவர்த்ததே'. அதில் பாபமும் இல்லை.

'தஸ்மாத் யுத்யஸ்வ' என்றதினால் கிருஷ்ணபகவான் யுத்தத்தில் எதிர்த்துநின்ற பீஷ்ம த்ரோணாதிகளை வதம் செய்யச்சொன்னான். அது அவனுடைய ஆஜ்ஞை. அவனால் ஏற்படுத்தப்பட்ட க்ஷத்ரிய தர்மம் என்று அறிந்துகொண்டு யுத்தம் செய்கிறவனுக்கு ஹிம்ஸை என்கிற பாபம்கிடையாது. ரணவைத்தியர்கள் தீவ்ர, வேதனையை யுண்டாக்கும் வ்யாபாரத்தைச் செய்தால் அந்த சிகித்ஸகனைப் பரமோபகாரிக ளென்று சொல்லுகிறோம். இதையெல்லாம் கவனித்து தர்மம், அதர்மம், இவ்விரண்டையும் சாஸ்திரங்கொண்டே யறியவேண்டு மாதலால், வேதப்ரமாணத்தை ஒப்புக்கொள்ளுகிற நமக்கு அதில் சொல்லியிருக்கிற பசுவினுடைய வபோத்தரணமானது பாபமேயல்ல. அதற்குப் பலமான ஸுக்ருத முண்டாகி அந்தப்பசு உத்தமமான லோகங்களை அடைகிறது. மகான்கள் செய்யும் யாகத்தில் பசுவினுடைய ஜந்மம் கிடைத்தவர்களுக்கு அனுயாஸேந உத்தமலோகம் கிடைக்கிறது. மேலான ஸுகத்தை தரக்கூடிய காரயமானதால், த்யாஜ்யமான ம்ருகசரீரத்தைப்போக்கி விடுவதில் ரணவைத்தியர்கள் செய்யும் சிகித்ஸைபோலே பசுவினுடைய ஆநுகூல்யத்திற்கே ப்ரவிருத்தமான வ்யாபாரமானதால் யாகத்தைப் புண்யம் என்று நிர்ணயித்திருக்கார்கள்.

மேல்நாட்டு நாகரீகத்தை அவலம்பித்தவர்கள், புத்தரை ப்ரமாதமாக ஸ்தோத்ரம் செய்கிறார்கள். சிறுவர்களின் பாடமொன்றில் 'புத்தர் என்பவர் ஒருயாகத்திற்காகக் கட்டியிருந்த 4000 - ஆடுகளை அவிழ்த்தது விட்டார்; ஆகையால் ஒரு பெரிய மகான்' என்று எழுதியிருக்கிறது. இந்தக் கதையின் ஆதாரத்தை ஒருவரும் காண்பிக்க முடியவில்லை. புத்தருடைய ஸமீப சிஷ்யரான அச்வகோஷன் என்பவன் 'புத்தசரித்திரம்' என்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறான், அதில் ஓரிடத்திலாவது புத்தர் யாகம் பண்ணக்கூடாது என்று சொன்னதாகக் காணப்படவில்லை. தவிரவும் புத்தருடைய பூர்வஜந்ம வ்ருத்தாந்தங்களைச் சொல்லுகிற ஜாதகமாலை என்னும் புஸ்தகத்தில் புத்தருடைய பூர்வஜந்மங்களைப்பற்றி 34 - கதைகள் எழுதிப்பட்டிருக்கின்றன. அவைகளில் புத்தர் அநேகயாகங்களைச் செய்ததாக எழுதப்பட்டிருக்கிறது யுத்தர்யாகமே கூடாது என்று சொலலி நிஷேதித்திருக்கும் பக்ஷத்தில். இந்த விருத்தாந்தம் எப்படிப் பொருத்தும். புத்தர் சொல்வதெல்லாம் 'தனக்கு ஒன்றும் தெரியவில்லை' என்பதுதான். புத்தமதமாகிற நாஸ்திகமதம் தன்னுடைய ஜன்ம பூமி

யைவிட்டுத் தேசாந்தரம் போய்விட்டதற்குக் காரணம் அது சாஸ்திரீயமான வேதத்துக்கு முன்னால் நிற்கமுடியவில்லை என்பதுதான்.

நிஷித்தமான செவ்வாய்க்கிழமைக்கு மங்களவாரம் என்று பெயரானது போல், ஆர்யருடைய வேதப்ராமாண்யத்தை ஒழித்த ஒரு ஸமாஜத்துக்கு ஆர்யஸமாஜம் என்று பெயராயிற்று. வேதத்தைச் சிறிது ஏற்றுக்கொண்டாலும் அதற்கும் அர்த்தம் வேறு என்கிறார்கள். வேதங்களுக்கு மகர்ஷிகளும் ஆசார்யர்களும் சொல்லுகிற அர்த்தம் ஸரியல்ல என்று சொல்வது பரிஹஸிக்கத் தக்கதாயிருக்கிறது. மேல்நாட்டுப் பாஷையில் எழுதப்பட்ட புஸ்தகங்களுக்கு எப்படி அவர்களை ஆதாரமாகக் கொள்கிறோமோ, அப்படியே நம்தேசத்து க்ரந்தங்களுக்கு அர்த்தத்தை நம் முன்னோர்களிடம் தான் அறியவேண்டும். வேதவித்யை யானது ஒரு ப்ருஹ்ம நிஷ்டனை ப்ராம்ஹணரிடத்தில் வந்து 'என்னை ரக்ஷிக்கவேணும், நான் உனக்குப் பெரியதனம், (புதையல்) என்னை அஸூயையுள்ள (வைகிறவ) னிடத்திலும், வக்ரஸ்ப பாவமுள்ளவனிடத்திலும், அடக்கமில்லாதவ னிடத்திலும் என்னைச் சொல்லாதே. அப்படி ரக்ஷித்தால் நான் உனக்கு அதிகவீர்யத்தை உண்டாக்குவேன்' என்று சொல்லும். எவன் வழியில்லாவழியில் வேதாந்தங்களைக் கேட்கிறானோ எவன் அப்படியே சொல்லுகிறானோ இவர்கள் இரண்டு பேர்களும் நாசத்தை யடைவார்கள். குறைவாகப் படித்தவன் வேதபுஸ்தகத்தைக் கையிலெடுத்தால் ஸ்வாதீநப்திகை (பதிவ்ரதை) யான ச்ருதியானது, தன்னைக் கெடுத்துவிடப்போகிறானே என்று பயப்படுகிறது. முன் காலத்தில் ராக்ஷஸர்கள் ஏற்பட்டு யக்ஞயாகங்களைக் கெடுத்ததாகக் கதை தெரியவருகிறது. இப்பொழுதோ வென்றால் ப்ராஹ்மண ஜாதியிலேயே அநேக ராக்ஷஸர்கள் உத்பத்தியாகி வர்ணாச்ரமதர்மத்தைக் கெடுக்க எத்தனித்து விட்டார்கள்.

இங்கிலீஷ் வாசித்து B. A. B. L. M. D. பரீக்ஷை கொடுக்கவேண்டுமென்றால் ஸர்க்காரில் கலாசாலையில் படித்தால்தான் பரீக்ஷைக்கு எடுக்கப்படுவார்கள். தவிரவும் பரீக்ஷையில் தேறினவர்களும் ஒரு பெரியவர் (chancellor) வாயால் நீங்கள் B.A. என்று சொன்னால்தான் அந்தப்படிப்பு கார்யகரமாகும். இதை எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி வேதார்த்தத்தை அறியவேண்டுமானால் ஸம்ப்ரதாயம் தெரிந்த பெரியோர்களை ஆச்ரயித்து அவர் நமக்கு அன்புடன் உபதேசித்து நமக்கும் ப்ராசீன புண்யவசத்தால் புத்தி குதர்க்கத்திலிறங்காமல் இருந்தால் தான் நாம் அவர்களுடைய கோஷ்டியில் சேரலாம்.

[திருக்குடந்தையில் சென்றவாரத்தில் நடந்த அப்தோர்யாமம் என்கிற யாகத்தில், ஸ்ரீ. உ. வெ. திருமலை நாதாச்சாரியர் ஸ்வாமியும் காலேஜ் பண்டிட் ஸ்ரீ. உ. வெ. கிருஷ்ணமாச்சாரியஸ்வாமியும் அழகாக யாகத்தின் மேன்மையைப் பற்றி உபந்யஸித்தார்கள்.]

கும்பகோணம். டி. ராமஸ்வாமி அய்யங்கார்

# வால்மீகியும் கம்பரும்.

வால்மீகிபகவான் ஸ்ரீராமனுடைய சரித்ரம் முழுவதையும் ப்ரஹ்மாவினுடைய அனுக்கிரஹத்தால் பிரத்யக்ஷீகரித்து லோகோபகாரத்துக்காகக் கேட்கிறவர்கள் காதில் ஹரி பக்தி என்னும் அம்ருதத்தைப் பொழியும்படி ஸ்ரீமத் ராமாயணம் என்னும் க்ரந்தத்தை சேய்திருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். கம்பர் ஆதி கவியை வெகு கவ்ரவத்துடன் அனுஸரித்து இருந்தும் நம்மாழ்வாருடைய அனுக்கிரஹத்தால் மஹர்ஷிக்கும் புலப்படாத அநேக விஷயங்களை வர்ணித்திருக்கிறார். இவருடைய கவிகள் மஹர்ஷியினுடைய ஸூக்திகளைக் காட்டிலும் அநேக இடங்களில் வெகு அழகாயும், பக்திரஸத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கின்றன இதற்கு த்ருஷ்டாந்தமாய் ஒரு விஷயம் உதாஹரிப்போம்.

ஸ்ரீராமன் ராவணவதம் செய்யும்பொருட்டு ஸமுத்ரத்தைத் தாண்டி ஸுக்ரீவ ராஜாவினுடைய ஸகல வானர, கரடி கொண்டமுஸர் ஸைந்யங்களுடன் லங்கைத் தீவு சேர்ந்து ராவணனுடைய பட்டணத்துக்கு ஸமீபத்திலிருக்கும் ஸுவேலபர்வதத்தில் ஒரு ராத்ரி வாஸம்செய்து மறுநாள் காலையில் ஸுக்ரீவனுடன் லங்காபட்டணத்தின் ஸந்நிவேசத்தையும் ஸ்வரூபத்தையும் பார்க்கும்பொருட்டு அம்மலையின் அதியுன்னதமான கொடுமுடியில் ஏறினார். அப்போது நிரம்பவும் உயரமுள்ள கோபுரத்தில் ஏறி ராமனுடைய ஸைந்யத்தின் ஸ்வரூபத்தைப்பார்க்க ராமன் முகமாய் திரும்பி நின்று கொண்டிருந்த ராவணனைப் பார்த்து ஸுக்ரீவன் ஸ்ரீராமனிட மிருக்கும் பக்தியால் ராவணனிடம் அடங்காக் கோபம்கொண்டு திடீரென்று மலை உச்சியிலிருந்து கிளம்பி ராவணன் முன் குதித்து, 'நான் ஸ்ரீராகவனுடைய தாஸன், உன்னுடைய ராஜ்யலக்ஷ்மியை இதோ எடுத்துவிடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே ராவணனுடைய கிரீடங்களைக் கீழே தள்ளி அவனுடன் வெகுநேரம் முஷ்டி யுத்தம் செய்து, பிறகு ராவணன் மாயையாய் யுத்தம் செய்ய ஆரம்பித்தவுடன் உடனே கிளம்பி ஸ்ரீராமன் ஸமீபம் வந்து சேர்ந்தான். அப்போது ஸுக்ரீவனைப் பார்த்து ஸ்ரீராமன், ராஜாக்களுக்கு இப்பேர்ப்பட்ட துணிவான கார்யத்தைச் செய்யத்தகுமா? என்னை இந்த ஸ்திதியில் கொண்டுவந்து சேர்த்து ஸந்தேஹாஸ்பதமான கார்யத்தைச் செய்யலாமா? உனக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டால் ஸீதையால் தான் எனக்கு என்ன பிரயோஜனம்? பரதன், லக்ஷ்மணன், சத்ருக்னன், இவர்களும் என் சரீரமுமிருந்து எனக்கு என்ன பிரயோஜனம்? உம்முடைய பராக்ரமம் எனக்குத் தெரிந்திருந்தும் நீர் வாராமலிருந்தால் ராவணவதம் செய்து, விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணி, பரதனையும் ராஜ்யத்தில் ஏற்படுத்திவிட்டு இந்தச் சரீரத்தை விட்டுவிடுகிறது என்று நிச்சயம் பண்ணியிருந்தேன்' என்று தன்னுடைய ஸ்வாபாவிகமான ஆச்ரித வாத்ஸல்யத்தைக் காட்டினார். ஸுக்ரீவன் அப்போது கேவலம் வாத்ஸல்யத்தால் ஸகல கபிராஜ்யம், ஸுகம், ஸம்பத்

தையும் அடைந்தும் த்ருதீயபுருஷார்த்தத்தையே பெரிதாக எண்ணிக் கஷ்டத்தை அநுபவித்துக்கொண்டிருந்த தேவரீரைக் கவனிக்காமலிருந்த மஹாபாபியான எனக்கு ஸர்வோத்க்ருஷ்டனான தேவரீர் இம்மாதிரி சொல்லுவது தகுமோ' என்று ஸ்ரீஸ்வாமி செய்திருக்கும் உபகாரத்தை உணர்ந்து அதற்கு தன்னால் பிரதிசெய்ய முடியவில்லையே என்று மஹா அநுசயத்துடன் சொல்லும் வார்த்தையை மஹர்ஷி அருளிச்செய்கிறார்.

'தவ பார்யாபஹர்த்தாரம் த்ருஷ்ட்வா ராகவ ராவணம். மர்ஷயாமி கதம் வீர ஜாநந் பௌருஷமாத்மந: ॥' ஹே ராமா! உம்முடைய பார்யையை அபஹரித்த ராவணனை என் கண்ணால் நேராகப்பார்த்தும் என் பௌருஷத்தை அறிந்த, தாஸனான அடியேன் எப்படி ஸஹிப்பேன்' என்று வ்யங்க்யமாய் அருளிச்செய்தார். இதையே கம்பர்:—

காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்டமாட்டேன்
நாட்டிலே குஹனார் செய்த நன்மையே நயக்கமாட்டேன்
கேட்டிலேன் னின்றுகண்டு கிளிமொழி மாதராளை
மீட்டிலேன் தலைகள் பத்தும் கொணர்ந்திலேன் வெறும் கை வந்தேன்.

என்று வர்ணித்தார்.

'ஹே ராமா! அசேதனான என்னைப்பார்த்து இத்தகைய பெரிய வார்த்தைகளைச் சொல்லலாமா? அடியேன் அதற்குத் தகுந்த பாத்ரனா? கேவலம் காட்டில் பிறந்து வளர்ந்து நிர்வ்யாஜமாய் பிரயோஜனத்தை உத்தேசியாமல் ஸீதையை ராவணனிடமிருந்து மீட்கச்சண்டைசெய்து உயிரிழந்த ஜடாயுவைப்போல் நான் ஏதேனும்செய்தேனா? நீ என்னுடைய ஸ்வாமி என்று சொன்ன ஒரு சின்ன வார்த்தைக்கு க்ருதஜ்ஞதாநுஸந்தானமாய், ஸ்வாமி இவ்விடமே எழுந்தருளியிருக்கவேண்டும், காட்டுக்குப் போகவேண்டாம்; அடியேன் தேவரீருக்கு எல்லாக்கைங்கர்யங்களையும் செய்கின்றேன் என்று நிர்ப்பந்தப்படுத்தித் தன் ராஜ்யத்திலிருக்கும்படி பிரார்த்தித்த கேவலம் காட்டில் பிறந்தகுஹப்பெருமான் சொன்னதுபோல் உபசாரவார்த்தைகளையாவது சொன்னேனா? இப்படி அவர் செய்தி யறிந்தும் சிறிதும் மனமுருகி வருந்தாமல் கேவலம் சரீரஸௌக்யத்தையே கருதுகின்றேனே! ராவணனோடு சண்டைசெய்து அவனைக்கொன்று தேவரீருடைய பிரியையான பார்யையைத் தேவரீரிடம்கொண்டுவந்துஸமர்ப்பித்தேனா? அதில்லையாயின் அந்தப் பாபியான ராவணனுடைய தலைகள் பத்தையும் அறுத்துத் தேவரீருடைய திருவடிகளில் சேர்த்தேனா? தேவரீர் செய்திருக்கும் உபகாரத்திற்கு அடியேன் ஒரு காரியமும் செய்யாமல் மஹாநீசனாக வெறும் கையோடே வந்து நிற்கிறேனே?' என்று மனம் கரைந்து பதில் கூறினான், என்று கம்பர் வர்ணித்திருப்பது இங்குதாஹரணமாகும்.

ஆர். ஸ்ரீநிவாஸராகவாசார்யார்.

## சிலசிலா சாஸனங்கள்.

காஞ்சிபுரம் ஸ்ரீவரதராஜஸ்வாமி கோயிலில் தாயார் ஸந்நிதிக்குப்போகும் வழியில் வடபுரமிருக்கும் முத்தத்தில் ஒரு சிறுகல்ஸ்தம்பமிருக்கிறது. இதில் ஸம்ஸ்கிருதத்தில் சார்த்தூல விக்ரீடித வ்ருத்தத்தில் இரண்டு ச்லோகங்களிருக்கின்றன. இதை ஒட்டித் தெலுங்கு வசனத்திலும், அதன்பிறகு நாகர அக்ஷரத்தில் ஒருகலவெட்டு மிருக்கின்றது. இதில் ஸம்ஸக்ருத ச்லோகங்களை இங்கு எடுத்துக்கொள்வோம். அவையாவன.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

1. ஸ்ரீசேஷாத்ரீச்வரஸ்ய நித்ய கிங்கர யதிச்ரேஷ்டோபதிஷ்டாத்மநா
ஸ்ரீமத்தோடரமல்ல ஸம்ஜ்ஞித ந்ருப: ச்ரேயோகுணாநாம் நிதி: ।
தேவ்யா ஸாகமசேஷலோக வரதம் தேவாதிராஜம் வநா
தாநீயாதரவாந் ந்யவீவிசதிபக்ஷ்மாப்ருத்ஸ்வகீயாஸ்பதே ।

2. அப்தே யுக்தே விரோதிநாமநி ஃபால்குநே மாஸி ச
ப்ரோஷ்டபதோத்தரர்க்ஷஸஹிதே தர்சே சநௌ வாஸரே ।
ஸ்ரீமத்தோடரமல்ல வர்ஷ வரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாஹ்வயா
கல்யாணம் ஜநயாம்பபூவ வ்ருஷப லக்நே ஸுமஹோத்ஸவம் ॥

இதன் அர்த்தம்.

'ஸ்ரீசேஷ சைலத்தில் எழுந்தருளியிருக்கும் பகவானுக்கு நித்தியகைங்கர்யம் செய்யும் ஸங்யாவலி:ச்ரேஷ்டரால் உபதேசிக்கப்பட்ட ரீதியால், நிரம்பவும் கீர்த்திபொருந்தினவரும், எல்லாகுணங்களுக்கும் ஸமுதா ஸ்தானமுமான ஸ்ரீதோடர்மல் என்னும் ராஜா ஸர்வஜகத்துக்கும் வேண்டியவரனைக் கொடுக்கக்கூடியஸ்ரீதேவாதிராஜப் பெருமாளை அவருடைய தேவியுடன் காட்டிலிருந்து எழுந்தருளப்பண்ணி மிகவும் பக்தியுடன் மறுபடி ஹஸ்திசைலம் என்ற அவருடைய ஆஸ்தானத்தில் பிரதிஷ்டை பண்ணிவைத்தார். விரோதிஞு பங்குனியீ உத்தரப்ரோஷ்டபதா நக்ஷத்ரம், அமாவாஸ்யை திதி சனிவாரம் கூடிய சுபதினத்தில் வ்ருஷப லக்னத்தில் ஸ்ரீதொடர்மல் என்ப

வர் ஸகல லோகத்துக்கும் க்ஷேமத்தைத் தருகிற வாதராஜப் பெருமாளை உடையார்பாளையம் காட்டிலிருந்து காஞ்சிபுரத்துக்குக் கொண்டுவந்து சேர்த்தார்'. மேல்காணப்பட்ட தெலுங்குக் கல்வெட்டில் சகஞ 1632 (1710 A. D.) ராஜா லாலா தோடாமல்லன், ஸ்ரீநிவாஸநுக்கு பிரதி நாமமான ஆத்தான் திருவேங்கடராமாநுஜ ஜீயர் ஸ்வாமியினுடைய வேண்டுகோளின்படி உடையார்பாளயம் காட்டில் ஒளிக்கப்பட்டிருந்த வாதராஜஸ்வாமியின் விக்ரஹத்தை காஞ்சிபுரத்திற்குத் திருப்பி எழுந்தருளப்பண்ணினர் என்று வெளியாகிறது. டில்லி என்றும் பட்டணத்தில் ராஜ்யபரிபாலனம் செய்துவந்த் அவுரங்கஸீப் என்ற முஹலாய சக்ரவர்த்தி 1658 - கி. பி. யில் தெற்கு தேசங்களில் மஹாராஷ்டார்களுடைய ஆளுகை வ்ருத்தி அடைந்து கொண்டிருந்தபடியால் அதை அடக்க ஒரு பெரிய ஸைந்யத்தை அனுப்பினன். துலுக்கர்கள் ஹிந்துக்களுடைய கோவிலில் த்வேஷத்தினாலும், ஸாதாரம் விக்ரஹாராதனத்தில் த்வேஷ புத்தியுள்ளவர்க ளாதலாலும் திவ்யமங்கள விக்ரஹங்களுக்குத் தீங்கு நேரிட்டுவிடுமே என்று பயந்து கோயிலதிகாரிகள் விக்ரஹங்களை ஒளித்து வெளியே கொண்டுபோய்த் திருச்சினாப்பள்ளி ஜில்லாவைச்சேர்ந்த உடையார்பாளயம் காட்டில் கொண்டுபோய் வைத்துவிட்டார்கள். மஹம்மதியர்களுடைய கலாபம் நீங்கி ஆபத்து ஒழிந்து காஞ்சீபுரம் நிர்ப்பயமான தேசமானவுடன் பெருமாளை எழுந்தருளப்பண்ண உத்தேசிக்கும்போது உடையார்பாளம் ஜமீந்தார் விக்ரஹங்களைக்கைப்பற்றிக்கொண்டு, திவ்யமங்கள விக்ரஹத்தின் திவ்ய ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டுத் திருப்பித் தரமாட்டேன் என்று மருதளித்து விட்டார். அப்பொழுது வேறு கதியில்லாமல், அநேகம் நல்ல செல்வாக்கிலிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான ஆத்தான் திருவேங்கட ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி தன் சிஷ்யனை லாலா தோடர்மல் என்பவரை ஒரு பெரிய ஸைன்யத்துடன் உடையார்பாளையம் போய் ஜமீன்தாரை பயமுறுத்தி விக்ரஹங்களைத் திரும்பி எழுந்தருளப்பண்ணும் என்று ஆஜ்ஞாபித்ததின்பேரில் ராஜா தோடர்மல் அப்படியே போய் ஜமீன்தாரிடமிருந்து விக்ரஹங்களை மீட்டுக் காஞ்சிபுரத்தில் பிரதிஷ்டை செய்து விட்டார்.

இந்த லாலா தோடர்மல் என்பவர் யரர் என்று விசாரிப்போம். இவர் காச்யப கோத்ரத்தில் பிறந்த டேக்சந்து என்று பெயர் கொண்ட ஒரு குஜராத்தி வைச்யருடைய பிள்ளை. இவர் தன்னுடைய புத்திசாலித்தனத்தால் ஆர்க்காடு நவாபு ஸாதத் உல்லாகான் என்பவருடைய நாணயம் அடிக்கும் ஆபிஸில் தலைமை உத்யோகத்தி லிருந்தார். இவர் நவாப் அரண்மனையில் நடக்கும் ஸங்கதிகளையும் டில்லி ராஜாங்கத்தில் நடக்கும் ஸங்கதிகளையும் ஈஸ்டு இந்தியா கம்பெனி உத்யோகஸ்தர்களுக்கு ரஹஸ்யமாய்ச் சொல்லிவந்தபடியால் இவருக்கு வேண்டிய த்ரவிய உதவியை அவர்கள் செய்தது மல்லாமல் இவருக்கு அவர்களிடம் அதிகச் செல்வாக்கும் உண்டாயிற்று இவருடைய ஸைச்யத்தால் நவாப்பும் இவரை மிகவும் கவுரவமாக நடத்திவந்தார். செஞ்சிக்கோட்டையை ஆண்டுவந்த



தேசங்கு ராஜனுடன் சண்டைபோட்டு அவனை வசப்படுத்த ஆர்க்காடு நவாப்பான ஸாதத் உல்லாகான் என்பவர் இவரைத்தன் ஸேனைக்குத் தலைவனாக அனுப்பினர். இது வீதியில் பாடிவரும் தேசங்குராஜன் கதையில் ஸ்பஷ்டமாய் வெளியாகிறது. இவர் தனக்கு வயஸு அதிகமான காலத்தில் தன்னுடைய ஆத்மோஜ்ஜீவனமான கார்யத்தை தேடிக்கொள்ள அக்காலத்தில் ரொம்பவும் செல்வாக்கி லிருந்ததிருப்பதியில் கைங்கர்யம் செய்துவந்த ஸந்யாஸியான ஆத்தான் ஜீயரிடம் உபதேசம் பெற்று அவருடைய முக்கிய சிஷ்யராக ஆய்விட்டார். இவர் கம்பெனிக்காரர்களிடமும் ஆர்க்காடு நவாப்பு இடமும் அதிக செல்வாக்கு உள்ளவராய் இருந்ததால் இவருக்கு எந்தக்கார்யமும் ஸுலபமாய் முடிக்கக்கூடிய ஸௌகர்ய மிருந்தது. இவர் ஸ்ரீமுஷ்ணத்தி லெழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு ஐந்து கிராமங்களை மான்யமாக விடும்படி டில்லிசக்ரவர்த்தியான பருக்ஸியரை பிரேரணை செய்து அப்படியே மான்யமும் விடப்பட்டதற்கு ஆதாரமாயுள்ள தாம்ர சாஸனமும் சென்னைபட்டணம் கன்கர்ஷி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய ஆசார்யனுடைய ஆஜ்ஞையை சிரஸாவஹித்து கி. பி. 1710ஞ உடையார்பாளயத்தை படை எடுத்து, வரதராஜ ஸ்வாமியின் திவ்யமங்கள விக்ரஹத்தை உபயநாச்சிமார்களுடன் காஞ்சிபுரம் எழுந்தருளப்பண்ணி பிரதிஷ்டை செய்து வைத்த உபகார ஸ்மிருதிக்காக இந்த தோடர்மல்லுடையவும் இவருடைய தாயார் தகப்பனருடைய பிரதிமைகள் பண்ணப்பட்டு தத்காலம் தொண்டரடிப்பொடி வாசல் என்று வழங்கப்பட்டுவரும் கோபுரத்துக்குள் வைக்கப்பட்டு இருக்கின்றன. இதுகள் கோபுர அறையில் இருட்டிலிருக்கிறபடியால் இவர்களை யாரும் கவனிப்பதில்லை. திருப்பதியில் கோவிலின் ஒருபக்கத்தில் தாம்ரத்தால் செய்யப்பட்ட மூன்று விக்ரஹங்கள் இருக்கின்றன. அவைகளின் பீடத்தில் தோடர்மல், மாதா மோஹநா தேவி, பிதா பிபி, என்று பெயர்களும் வரையப்பட்டிருக்கின்றன. ஆகையால் தோடர்மல் விக்ரஹங்களுடன்கூட இருக்கும் வைத்த இரண்டு விக்ரஹங்களும் அவருடைய தாயார் தகப்பனரோ, அல்லது வேறு எவருடையதோ? ஒரு ஸமயம் அவருடைய பத்நீயுடையதுவாகவு மிருக்கலாம். திருப்பதியிலும் இவருடைய விக்ரஹம் செய்து வைத்திருப்பதால் இவர் திருப்பதிக்கோயிலுக்கும் ஜாஸ்தியான உபகாரத்தைச் செய்திருக்கலாம் என்று ஊஹிக்கக்கூடியதாயிருக்கிறது.

தோடர்மல்லுடையவும் இன்னும் அவரைச்சேர்ந்த பந்துக்களின் பிரதிமைகள் வைத்திருக்கிறபடியால அந்த கோபுரத்துக்கு தோடர்மல் கோபுரம் என்று பெயர் அந்த நாளில் வழங்கிவந்திருக்கும். பிறகு தோடர்மல் செய்திருக்கும் உபகாரமும் மரக்கமரக்க அவருடைய பிரதிமையும் கண்ணுக்கு மறைவான இடத்தில் வைக்கப்பட்டபடியால் அவர் பெயர் மறந்துபோய், அவர் பெயரால் வழங்கிவந்த கோபுரத்துக்கு தோடர்மல் கோபுரம் என்[illegible] ஸரி

186726

என்று தோணுமல் தொண்டரடிப்பொடி ஆழ்வார் நமக்கு ஆசார்யரானதால் அவர் பெயர்தான் இப்படி திரிபாய்ப் போய்விட்டது என்றுநினைத்து, தொண்டரடிப்பொடி வாசல் என்று மாத்திவிட்டார்கள் என்று நினைக்கவேண்டி யிருக்கிறது. இப்பொழுதுகூட தோடர்மல்லின் பிரதிமை அந்த வாசலில் வைத்திருப்பதால் இனி மேலாவது தோடர்மல்லன் வாசல் என்று ஸரியானபடி பெயரை கோவிலதிகாரிகளும் இன்னும் மற்ற ஜனங்களும் மாத்தி விடுவார்கள் என்று நம்புகிறோம்.

ஆத்தான் ஜீயர் யார் என்று சற்று விசாரிப்போம். இவர் ஹைதராபாத்து ஸமஸ்தானத்தில் கோல்கொண்டா ராஜ்யத்தில் ஸித்தலூர் ஸ்ரீநிவாஸராவ், ராமாநுஜராவ் என்ற பெயர்கொண்ட நியோகிப்ராம்மண ஸஹோதரர்களில் ஒருவர். இவர்கள் ஒருகாலத்தில் வைஷ்ணவ மதத்தை அவலம்பித்து கோலகொண்ட வியாபாரிகள் என்ற பெயரால் வழங்கப்பட்டுவரும் ஸ்ரீவைஷ்ணவர்களாக ஆய்விட்டார்கள். இவர் ஸித்தலூர் ஸ்ரீநிவாஸராவ் என்பவர். இவர் கோல்கொண்டா நவாப் தானீஷாவுக்கு மந்திரியா யிருந்த அக்கண்ணு, மாதண்ணு என்ற ஸஹோதரர்களுக்கு பந்து. இவருக்கு ஒருபெரிய ஜமீன் இருந்ததாகத் தெரியவருகிறது. இதை டில்லி சக்ரவர்த்தியான அவுரங்கஸீப் தெர்க்கேபடை எடுத்து தானீஷா ராஜ்யத்தை கொள்ளை அடித்து அக்கண்ணு மாதண்ணுவைக் கொன்று ஹிம்ஸைசெய்து அன்னியாயம் செய்யும்போது உயிர்தப்பி தெற்கே ஓடிவந்து பிரகு கலாபம் முடிந்தவுடன் தன்னுடைய சொத்தை எல்லாம் விற்றுவிட்டு, காஞ்சிபுரம் வந்து சேர்ந்து விட்டதாக பழயநாள் கையெழுத்து தஸ்தவேஜிகளிலிருந்து வெளியாகிறது. இவர் பணக்காரர் - ஒரு ஸமயம் ஆர்க்காடு நவாப் அரண்மனையில் ஒருபெரிய உத்யோகத்தை வஹித்திருந்திருப்பார் என்று மூஹிக்க இடமிருக்கிறது. ஆனல் இதை உறுதிப்படுத்த தஸ்தவேஜிகளில்லை. இவருடைய கடைசி காலத்தில் திருப்பதியில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியில் ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டு ஸந்நிதியில் கைங்கர்யம் செய்துகொண்டிருந்தார். காஞ்சீபுரம் கோவிலிலும் அநேக ஸஹாயம் செய்திருக்கிறார். முதலில் இவர் வரதராஜப்பெருமாளை தோடர்மல்லைக் கொண்டு ஆஸ்தானத்தில் ஸ்தாபித்துவைத்தார். இவர் தெங்கலை ஸம்ப்ரதாயத்தைச்சேர்ந்தவரானதால் கோவிலில் எந்தக்காரியம் ஆரம்பித்தாலும் தாதாசார்யர்களுடைய க்ருஹங்களில் எந்தக்கார்யத்துக்கும் ஸ்ரீசைலேச தயாபாத்ரம் சொல்லித் துடங்கவேணும் என்று உடன்படிக்கையை அக்காலம் கோவில் தர்மகர்த்தாக்களுடன் செய்துகொண்டு, பெருமாளை எழுந்தருளப்பண்ணினது கோவில் அதிகாரிகளுக்கும், இன்னும் தென்கலை வடகலை கோவில் ஸம்மந்தப்பட்டவர்களனைவருக்கும் தெரிந்தவிஷயம்.

இந்த ஸம்பவம் ஜ்ஞாபகமிருக்கும் பொருட்டு பிரதிவருஷம் ஒருமுறை உடையார்பாளயம் உத்ஸவம் என்று ஒரு உத்ஸவம் நடத்தப்பட்டு வருகிறது.

## ஸ்ரீ அஹோபிலமடம் ஒரு நல்ல செய்தி.

இந்த ஸந்நிதி ஆஸ்தானத்தை அலங்கரிக்கும் ஸ்ரீஸ்வாமி மட ஸம்பந்தமான லௌகிககார்ய நிர்வாஹத்தின் பொருட்டுத் தமக்கு தவியாகத் திவான் என்னும் பெயருடன் ஒரு லௌகிக அதிகாரியை நியமித்துக்கொண்டிருக்கிருர் என்பதைக்கேட்டு மிகவும் ஆநந்திருக்கிறோம். மடத்து சிஷ்யகோடிகளும் சிரகாலமாய்த் தாங்கள் எதிர்பார்த்த அந்தச் சீர்திருத்தம் நிறைவேறியதை ஹார்த்தமாக அப்யுபகமம் பண்ணுவார்கள் என்பது நிச்சியம். நமது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை முதலில் ஸ்ரீ அஹோபில மட சிஷ்யஸபையாக அங்குரித்திருந்த காலத்தில் நீடாமங்கலத்தில் நடந்த ஷை ஸபையின் இரண்டாவது வார்ஷிக மஹாஸங்கத்தில் ஸபாத்யக்ஷராக விருந்த காலஞ்சென்ற ஸ்ரீ. உ. வே. டி. ராஜகோபாலாசார்யர் செய்த உபந்யாஸத்தாலும் ஷை மஹாஸங்கத்தில் நிறைவேறின தீர்மானங்களினுலும் ஷை சிஷ்யர்களுடைய அபிநிவேசம் விசேஷமாக ப்ரகாசப்படுத்தப்பட்டது. இந்த ஸ்வாமி பட்டத்துக்கு எழுந்தருளின அவஸரத்தில் சென்ற தை மீ" த்திய ஸஞ்சிகையில் நாம் மீண்டும் இவ்விஷயத்தைக் குறிப்பாக விஜ்ஞாபித்துக் கொண்டோம் இவ்வளவு சீக்கிரத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் இதைத் திருவுள்ளம் பற்றியதிலிருந்து; அவர்கள் மடத்தின் அபிவ்ருத்திக் குறித்தான கார்யங்களைச் செய்வதிலும் சிஷ்யவர்க்கங்களை ஏற்றுக்கொள்வதிலும் பூர்ண அபிமதியும் ச்ரத்தையு முள்ளவர்களா யிருக்கிருர்கள் என்று வ்யக்தமாகிறது. இதுவரையில் யாதுகாரணம் பற்றியோ செய்ய முடியாமலிருந்த இந்தச்சீர்திருத்தத்தை இவர்கள் நிறைவேற்றியதும் இவர்களுடைய பாக்யவிசேஷமே! சென்னைச் சட்டஸபையில் நிறைவேறிய ஹிந்துமத தர்மஸ்தாபந மசோதாவினுல் ஸந்யாஸிகளான மடாதிபதிகளின் பேரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விபரீத ஆதிக்யத்தை நோக்குங்கால் இந்த ஏற்பாடு இன்றியமையாததென்றும் சிறியதும் தாமதத்தைப் பொறுக்காதென்றும் தெளிவாகும். இவ்வழியை இதர மடாதிபதிகளும் காலதாமத மன்றிப் பின்பற்றுவார்கள் என்று ஸவிநயமாக எதிர்பார்க்கின்றோம்.

மடம்போன்ற பெரிய நிர்வாஹங்களில் அந்த பரம்பரையாய் நடந்துவரும் முறைகளை மாற்றிப் புதிய ஏற்பாடுகளைச் செய்வது எளிதல்ல! ஆஸ்தாநாதிபதிகளுக்குப் பலவித நிர்ப்பந்தங்களிருக்கின்றன. கெடுகிலும் உதாஸீநர்களாக விருப்பவர்கூட இம்மாதிரி

யான ஸமயங்களில் அதிசங்கைகளுக் காளாகி ப்ரவ்ருத்திக்கத் துடங்குவதுண்டு 'அநாதிஸித்தா உநாதா விஷவாஸ' என்கிற ந்யாயத்தில் நீடித்தகாலமாய் ந்யாய்யமாகவோ வேறுவிதமாகவோ யதேச்சையாய் த்ரவ்யாதிகளை யனுபவித்தும் செல்வாக்குச் செலுத்தியும் வருகிறவர்கள் பலவித இடையூறுகளைச் செய்வார்கள் என்பதில் ஸந்தேஹமுண்டோ? ஆகையால் ப்ரதிபந்தகங்க ளெவ்வளவு வந்தாலும் த்ருடமான ஏக அத்யவஸாயத்துடன் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவடிபலத்தை முன்னிட்டு 'ஸ்வாமி ஸ்வாமிநா ஸத்யஸங்கல்ப நவநீத ஹ்ருதயோ' என்கிற கணக்கில் பின்வாங்காமல் ஸ்ரீஸ்வாமியும் அவருடைய திவானுமிருந்தார்களானால் மடத்தின் ஸ்ரீயானது அமோவமாய் வ்ருத்தியாவதுமன்றி முதலில் த்வேஷிப்பவர்களும் காலக்ரமத்தில் நன்றி செலுத்துவார்கள் என்பதும் நிச்சயம்

மதுரையில் ப்ரமுக வக்கீல்களில் ஒருவராயிருந்து பொது நன்மைக் குழைக்கும் பொருட்டுச் சிறிதுகாலமாய் நல்லவரும்படியுள்ள தமது தொழிலை த்யஜித்து இருக்கும் ஸ்ரீமான் உ. வெ. எஸ். டி. க்ருஷ்ண அய்யங்கார் ஸ்வாமியை முதல் திவானாக நியமித்து ஸ்ரீஸ்வாமி ஸ்ரீமுகம் ஸாதித்திருப்பதாகக் கெட்டு மகிழ்வுற்றோம். மடத்துச் சிஷ்ய ஸமூஹத்துக்கு இவர் நன்றாய்த் தெரிந்தவர்; லௌகிகத்தில் நல்ல பதவியை யடைந்தும் வைதிக ச்ரத்தை பூர்ணமா யிருப்பவர்; ஸதாசார்ய ஸந்நிதியில் க்ரமமாக சாஸ்த்ர மதிகரித்து மதாபிமானமும் ஆசார்ய ப்ரதிபத்தியும் நிரம்பியவர். இவர் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனத்தில் ஊக்கமுடையவராய்த் திருவஹீந்திரபுரம் ஸ்ரீதேசிகன் ஸபையின் பொருட்டு விசேஷ கைங்கர்யம் செய்து வருகிறார். இந்த உத்யோகத்தை நிர்வஹிப்பதற்கு வேண்டிய அஸாதாரணமான புத்தியும் பக்தியும் அவகாசமும் உள்ளவர். ஸ்வார்த்த ப்ருவ்ருத்திகளில் ஸங்கமற்றிருப்பவர். ஸ்ரீஸ்வாமி தீர்க்காலோசனை செய்தே இவரை நியமித்திருக்கிறார் என்னத் தட்டில்லை. ப்ராம்மணர்களுக்கு இந்த ராஜதானியில் ஸப்ரயோஜனமாக அந்வயிக்கக் கொஞ்சங்கூட அவகாசமில்லாத ராஜீயவிஷயங்களில் மூழ்கிவிடாமல் ஸ்ரீக்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமி தமது விராமத்தை ஸ்ரீஸந்நிதி கைங்கர்யத்துக்கு அர்ப்பணம் செய்யநேர்ந்தது நமக்கு விசேஷ குதூஹலத்தைக் கொடுக்கின்றது.

பத்ராதிபர்.

---



ஷ்டித இதி - ஸ்வே மஹிம்நி யதிவா ந மஹிம்நி' (ப்ருஹ்மத்திற்கு ஆதாரம் எது? என்றால் தன்னுடைய மஹிமை தான் ஆதாரம். அதாவது, அதற்கு ஆதாரம் யாதொன்றுமில்லை. என்பதுபோல், இந்த உபாதான திரவ்யத்திற்கு ஆதாரம் ஒன்றுமில்லை, என்றிவைகளால் ப்ரும்மம் ஜகத்திற்கு உபாதான காரணமென்று சுருதிகள் முறையிடுகின்றன.

மேலும் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று ஸங்கல்பித்த ப்ருஹ்மமானது "ததாத்மாநம் ஸ்வயமகுருத' (தன்னையே ஸ்ருஷ்டித்துக்கொண்டது.) ஸ்ருஷ்டிக்குக் கர்மாவாகவும் கர்த்தாவாகவும் (both subject and object) தானே இருந்ததென்பதால் நிமித்தகாரணமும் உபாதான காரணமும் ப்ரும்மமே என்று ஏற்படுகிறது. ,அவிபக்த நாமரூபமான ஆத்மா கர்த்தாவென்றும், விபக்தநாமரூபமான ஆத்மா கார்யமென்றும் அர்த்தம்.

சிதசித்வஸ்துக்களை சரீரமாயுடையதும் அவைகளுக்கு ஆத்மாவுமான பரப்ரும்மமானது ஸங்கோசம் (குறுகியிருத்தல்) என்கிற காரணவஸ்தை, விகாஸம் (விரிவு) என்கிற கார்யாவஸ்தை, என்கிற இரண்டு அவஸ்தைகளையுடையது என்று சொல்வதில் யாதொரு விரோதமுமில்லை. ஏனெனில் ஸங்கோசம், விகாஸம் என்பது ப்ரும்மத்திற்கு சரீரமாயிருக்கும் சித் அசித் இவைகளுக்கே யல்லாமல் ப்ரும்மத்தின் ஸ்வரூபத்திற்கல்ல. சரீரத்திற்குரிய தோஷங்கள் ஆத்மாவில் ஸம்பந்திக்கமாட்டா. ஆத்மாவிற்குரிய குணங்களும் சரீரத்திற்கு உண்டாகமாட்டா. எப்படி யென்றால் தேவன், மனிதன், மிருகம், விருக்ஷம் முதலிய சரீரங்களையுடைய ஜீவாத்மாக்களின் சரீர தோஷங்களாகிற பால்யம், யௌவநம், கிழட்டுத்தனம் முதலியவைகள் ஆத்மாவில் ஸம்பந்திப்பதில்லை. ஆத்மாவுக்குரிய ஜ்ஞானம் முதலிய குணங்களும் சரீரத்தில் ஸம்பந்திப்பதில்லை. ஆகையால் சரீரம் பரிணாமத்தை (மாறுதலை) யடைவது என்பது பரப்ரும்மத்திற்கு தோஷமான ஸ்வபாவமல்ல. பின்னை யென்னவென்றால் தடையில்லாததும் அளவற்றதுமான ஈச்வர ஸ்வபாவத்தைக் காண்பிக்கின்றது.

காரணமாகிற ப்ரும்மத்தைக்காட்டிலும் ஜகத்தாகிற கார்யம் விலக்ஷணமாய் (வேறாக) இருப்பதால் ப்ரும்மம் உபாதான காரணமன்று என்று சொன்ன யுக்தியும் ஸரியல்ல. விலக்ஷணமாயிருக்கும் வஸ்துக்கள் காரண கார்யங்களாயிருக்கப் பார்க்கிறோம். தேன் கூட்டிலிருந்து அதைக் காட்டிலும் விலக்ஷணமான மாக்ஷிகம் என்னும் புழு முதலியவைகளும், கோமயத்திலிருந்து அதைவிட விலக்ஷணமான தேள் முதலியதும் உண்டாகின்றதல்லவா? அதுபோல் காரணமான ப்ரும்மமும் தன்னைக்காட்டிலும் விலக்ஷணமான ஜகத்தாகப் பரிமிணமிக்கின்றதென்று சொல்வதில் யாதொரு பாதகமுமில்லை.

மேலும் நிமித்தமும் உபாதானமும் ஒன்றாயிருப்பதை நாம் லோகத்தில் காணாமலிருப்பதால் ப்ரும்மம் உபாதான காரணமாக மாட்டாது என்று சொல்வதும் ஸரியல்ல. இதற்கு த்ருஷ்டாந்தம் எங்கு அகப்படும்? ப்ரும்

மத்தைப்போல் வேறு வஸ்து ஏதாவது உண்டா? அவ்விதமிருந்தாலல்லவோ த்ருஷ்டாந்தத்தைக் காண்பிக்கலாம். எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணமாயும், ஸர்வசக்தியுள்ளதும், ஸர்வஜ்ஞமுமான பரப்ரும்மத்திற்கு உபயவித காரணமாயிருக்கும் தன்மை பொருந்தும். அசேதனமான மண் முதலியவைகளுக்கு ஜ்ஞானமில்லாததால் அதிஷ்டாதாவா யிருக்கும் தன்மையில்லாததாலும், அவைகளுக்கு அதிஷ்டாதாவான குயவன் முதலியவர்களுக்கு ஈசுவரனுக் கிருக்குமாப்போல் விசித்ரமான பரிணாமசக்தி (மாறும் சக்தி) இல்லாததாலும், ஸத்ய ஸங்கல்பத்வம் இல்லாததாலும் நமக்கு திருஷ்டாந்தம் அகப்படவேதில்லை. ஆனால் நம் மனதிற்கு எட்டாத ஜ்ஞான பல சக்திகளையுடைய பரப்ரும்மமானது ஸவிஜ்ஞ விவிய விசித்ர ரசனையை யுடைய ப்ரும்மாமுதல் ஸ்தம்ப பர்யந்தமான ஜகத்தாகப் பரிணமிப்பதால் ப்ரும்மமே ஜகத்திற்கு உபாதான காரணமென்று சொல்ல யாதொரு ஆக்ஷேபணையுமில்லை.

## 'அத்வைதம், தத்வம்' என்பதின் திரண்டபொருள்.

இவ்விதம் ஸர்வத்துக்கும் ஈச்வரனாய், ஸர்வசேஷியாய், ஸ்வரூபத்தாலும் காலத்தாலும் வஸ்துவாலும் அளவிடக்கூடாதவனாய், ஸர்வகர்ம ஸமாராத்யனாய், ஸர்வபல ப்ரதாதாவாய், ஸர்வாதாரனாய், ஸர்வகார்யத்தையும் உண்டுபண்ணுகிறவனாய், ஸர்வசப்த வாச்யனாய், ஸர்வ வ்யாபக சேதனனாய், ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்ட வேஷத்தாலே ஜகதுபாதான காரணமாய், ஸங்கல்ப விசிஷ்ட வேஷத்தாலே நிமித்த காரணமாய், காலாதிகளுக்கு அந்தர்யாமி வேஷத்தாலே ஸஹகாரி காரணமாய், ஹேய ப்ரத்யநீக அநந்த கல்யாணகுணகண விசிஷ்டனாய், ஸர்வாவஸ்தையிலும் லக்ஷ்மீ விசிஷ்டனாய், பரப்ரும்ம மென்றும். ஸர்வேச்வர னென்றும், புருஷோத்தம னென்றும், ச்ருதிகளில் முறையிடப்பட்டவனுமான ஸ்ரீமந்நாராயணன் தான் அத்வைதமான தத்வம். இவன் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறான். அண்டத்தை ஸ்ருஷ்டித்த பின் சதுர்முகன், தக்ஷப்ரஜாபதி, காலம், இவர்களுள் அந்தர்யாமியா யிருந்துகொண்டு மற்ற ஸ்ருஷ்டியைச் செய்கிறான். விஷ்ணு அவதாரரூபமாயும் லோகபாலர் மனு முதலியவர்கள், ராஜா, மாதா, பிதா, காலம் முதலியவர்களுக்குள் அந்தர்யாமியாயு மிருந்துகொண்டு ஜகத்தை ரக்ஷிக்கிறான். ருத்ரன், காலம் இவர்களுள் அந்தர்யாமியாயிருந்து கொண்டு ஜகத்தை ஸம்ஹாரம் செய்கிறான்.



## பகவத் ரூபத்தின் ஐந்து ப்ரகாரங்கள்.

இந்த ப்ரகாரங்களையுடைய ஈச்வரன் பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் என்கிற ஐந்து ப்ரகாரமாயிருக்கிறான். பரரூபமாவது:— த்ரிபாத் விபூதி யென்கிற ஸ்ரீவைகுண்டலோகத்தில், திருமாமணி மண்டபத்தில் ஸ்ரீபூமி நீளா ஸமேதனாய், திவ்யாயுதபூஷண ஸஹிதனாய் 'ஸதா பச்யந்தி ஸூரய:' என்கிறபடியே அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளான நித்யஸூரிகளால் அநவரதம் ஸாமாதி கானங்களால் ஸ்துதிக்கப்பட்டும், மற்று முள்ள முக்தர்களா லனுபவிக்கப்பட்டு முள்ள பரப்ரும்ம வாஸுதேவாதி சப்தங்களால் பேசப்படும் அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹம். வ்யூஹமாவது:— ஜகத் ஸ்ருஷ்டி முதலியவைகளுக்காகவும் உபாஸனத்திற்காகவும் வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன், என்கிற நான்கு விதமாயிருப்பது. விபவமாவது:—அந்தந்த ஜாதிக்குரிய ரூபங்களோடு மத்ஸ்ய கூர்மாதிகளாக அவதரிக்கை. இந்த அவதாரங்களுக்கு பகவானுடைய இச்சைதான் காரணம்; துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனாதிகள் தான் பிரயோஜனம். அந்தர்யாமியாவது:— ஸ்வர்க்க நரகாதி அநுபவதசையிலுங்கூட ஜீவாத்மாவுக்கு 'ஸர்வஸ்ய சரணம் ஸுஹ்ருத்' என்றபடியே ஸுஹ்ருத்தாய் யோகிகளால் தர்சிக்கப்படும்படியாய் ஹ்ருதய ப்ரதேசத்திலுள்ள ரூபம். ஜீவனோடுகூடக் கலந்திருந்தாலும் அவனுடைய தோஷங்களால் ஸம்பந்தப்படாதவன். அர்ச்சா ரூபமாவது:— தேசகாலத்தா லுண்டாகும் தூரமில்லாமல், தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு இஷ்டமான த்ரவ்யத்தைச் சரீரமாக ஸ்வீகரித்து அதிலும் அதே அளவுள்ள அப்ராக்ருத சரீரத்தை யுடையவனாய், அர்ச்சகர்களுக்குப் பராதீனமாய் ஸ்நாந போஜநாஸந சயநாதிகளையடைந்து யாவற்றையும் பொறுத்துக்கொண்டு பரிபூர்ணனாய் க்ருஹம் க்ராமம், சிறந்த மலைகள் முதலியவைகளில் இருக்கும் மூர்த்தி விசேஷம்.

இவ்விதம் ப்ருஹி = வ்ருத்தௌ என்கிற தாதுவிலிருந்து 'ப்ருஹதி ப்ரும்ஹயதீதி ப்ரும்ம', 'ப்ருஹத்த்வாச்ச ப்ரும்ம' என்று ஸ்வரூபம், குணம் முதலியவைகளில் தானும் பெரியதாயும், 'ஸர்வ ஸங்கோசாய கல்பதே' என்கிறபடியே ஸகல ஸங்கோசத்தையும் நிவ்ருத்திசெய்து நிரவதிகமான ஜ்ஞாநாநந்த விகாஸ ரூபமான மோக்ஷம் என்கிற ஆநந்த்யத்தை (infinitude in Knowledge and bliss) தன்னை வசப்படுத்திய ஜீவர்களுக்குக் கொடுக்கக்கூடிய வல்லமையும் ஸ்வபாவமு முள்ளது ப்ரும்மம். துக்ககரமாயும் அநாதியுமான இந்த ஸம்ஸாரத்தி னின்றும் மோக்ஷம் அடை

வதற்கு உபாயம் என்னவென்ருல் அவனை வசப்படுத்திக் கொள்வது தான். அவனை ஜ்ஞானத்தால் தான் வசப்படுத்த வேண்டும். இந்த ஜ்ஞானம் பக்தி ரூபமாகவாவது ப்ரபத்தி ரூபமாகவாவது இருக்கும். பக்தி ப்ரபத்திகளை வ்யாஜமாகக்கொண்டு ஈச்வரன் மோக்ஷத்தைக் கொடுக்கிருன். பக்தியாவது:—கர்மயோக ஜ்ஞான யோகங்களினுல் ஸம்ஸ்காரத்தை யடைந்த அந்தஃகரணத்தால் ஸாத்யமாயும், யமம் நியமம் முதலிய அஷ்டாங்க யோகத்தோடு கூடியதாயும், முதல் மூன்றுவர்ணத்தாரை அதிகாரிகளாகக் கொண்டதும், அந்தந்த வர்ணம் ஆச்ரமம் இவைகளுக்குரிய தர்மங்களை அங்கமாயுடையதும், வெகு ப்ரயாஸத்தால் ஸாத்யமானதும், தைலதாரைபோல் இடைவிடாத ஸ்ம்ருதியின் தொடர்ச்சியாயும், ப்ரதி தினம் அப்யாஸத்தால் சிறப்பை யடைகிறதும், சரீர மிருக்குமளவும் அனுஷ்டிக்கவேண்டியதுமா யிருக்கும். த்யானம் என்று சொல்லப்பட்ட இந்த பக்தியானது வித்யா பேதத்தினுல் அநேக விதமாயிருக்கும். அந்த வித்யைகள் ச்ருதியில் ஜ்ஞான காண்டத்தில் ப்ரஹ்மவித்யைகள் என்று சொல்லப்பட்ட அக்ஷரவித்யா, அந்தராதித்ய வித்யா, தஹரவித்யா, ஸத்வித்யா, உபகோஸலவித்யா, சாண்டில்யவித்யா, வைச்வாநரவித்யா, ந்யாஸவித்யா முதலான 32 வித்யைகள். ந்யாஸவித்யையைத்தான் ப்ரபத்தியென்று சொல்லுவது. ப்ரபத்தி யென்பது:— மஹாவிச்வாஸாதிகளால் ஸம்ஸ்காரத்தை யடைந்த அந்தஃகரண ஸாத்யமாயும் ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளை மாத்ரம் பரிகரங்களா யுடையதாயும், இந்தச் சரீரத்தின் முடிவில் முக்தியைக் கொடுக்கக் கூடியதாயும், ப்ரார்த்தநாகர்ப ஸமர்ப்பண ந்யாஸ (ப்ரார்த்தனையோடுகூடிய ஸமர்ப்பண) ரூபமாயுமிருக்கும். இவைகளின் ஸ்வரூபாதிக ளெல்லாம் ஸத்ஸம்ப்ரதாய பூர்வகமாக அறியப்பட வேண்டிய தாகையால் இங்கு விஸ்தரிக்கப்படவில்லை.

நம் ஸித்தாந்தத்தில் பக்தி ப்ரபத்திகளே மோக்ஷோபாயங்க ளென்று சொல்லப்பட்டது. வேதபாஹ்யர்களுக்குள் சிலர்கள் தேஹத்தைக் காட்டிலும் வேருன ஆத்மா என்பதை அங்கீகரிக்காம லிருப்பதால் அவர்களுக்கும், ஜ்ஞானம் க்ஷணிகம் என்று சொல்லுகிறவர்கள் பக்ஷத்தில் அதுவே ஆத்மதத்வ மாதலால் அவர்களுக்கும், பாஷாணத்திற்கு ஸமமா யிருப்பது தான் மோக்ஷம் என்று சொல்லும் வைசேஷிகர்கள் முதலியவர்களுக்கும், ஸாங்க்யாதிகள் ஈசுவரனை அங்கீகரிக்காததால் மோக்ஷம் ப்ரக்ருதிக்கோ அல்லது புருஷனுக்கோ என்பது ஸந்தேஹ மாதலால் அவர்களுக்கும், மாயாவாதிகள் மதத்தில் வ்யாவஹாரிக வாக்யமானது பாரமார்த்திகமான அபேதஜ்ஞானத்தையுண்டுபண்ணுதாகையால் அவர்களுக்கும் மோக்ஷத்தில் ப்ரவ்ருத்தியே உண்டாகாது. மோக்ஷத்தில் ப்ரவ்ருத்தியை யுண்டாக்குகிற மதம் நம்முடைய மதம் ஒன்றே.



இவ்விதமிருக்கும் மோக்ஷோபாயத்தை ஸ்வீகரித்து அனுஷ்டித்தவன் பிறகு நித்ய நைமித்திக பகவதாஜ்ஞா கைங்கர்ய கர்மங்களை பலத்திலாசையில்லாமல் ஸ்வயம் ப்ரயோஜநமாய்ச் செய்துகொண்டு, பகவானுடைய அபசாரமும், பாகவதர்களுடைய அபசாரமும் நேரிடாதபடி நடந்து கொண்டு, சரீரவியோக காலத்தில் தான் புண்யங்களைத் தன் ஸுஹ்ருத்துக்களிடத்திலும், பாபங்களைத்தன் சத்துருக்களிடத்திலும் வைத்துவிட்டுத் தன் ஹ்ருதயத்திலுள்ள பரமாத்மாவினிடத்தில் இளைப்பாறி, முக்திக்கு த்வாரமாகிற ஸுஷும்நா நாடிவழியாய் ப்ரும்மரந்திரத்தி னின்றும் வெளிக்கிளம்பி, ஹார்த்தனை புருஷனேடுகூட அர்ச்சிராதி மார்க்கமாய்ச் சென்று, ப்ரக்ருதிக்கும் வைகுண்டத்திற்கும் எல்லையாகிற விரஜா நதியைத்தாண்டி ஸூக்ஷ்மசரீரத்தைவிட்டு, அப்ராக்ருத திவ்ய சரீரத்தையடைந்து சதுர்ப்புஜனுய், ப்ரும்மாலங்காரங்களால் அலங்கரிக்கப்பட்டு, வைகுண்டநகரத்தில் ப்ரவேசித்து அங்கே திருமாமணி மண்டபத்தில் நாகபர்யங்கத்தில் வீற்றிருக்கும் பகவானைத் தர்சித்து, அவரை அநுபவித்து, ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தையிலும் உசிதங்களான கைங்கர்யங்களைச் செய்வதில் ப்ரீதியுள்ளவனுய், குணுஷ்டகங்களை யடைந்து, ஜகத் வ்யாபாராதிகளைத்தவிற ஜ்ஞாநாநந்த போகாதிகளில் பகவானுக்கும் தனக்கும் யாதொரு தாரதம்யமு மில்லாமல் ஆநந்தாநுபவம் செய்துகொண்டு, மறுபடியும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவராமல், பகவானைக்காட்டிலும் என்றைக்கும் வேருகவே இருந்துகொண்டு நித்யர்களுடன் நித்ய ஸுகத்தை அநுபவித்துக் கொண்டிருப்பான்.

இதைத்தான் மோக்ஷம் என்றும், பரமபுருஷார்த்த மென்றும், ஸாயுஜ்யம் என்றும் சொல்வது. ஸாயுஜ்யமாவது, ஸயுக்கினுடைய தன்மை. ஸயுக்காவது, ஒரு போக்தாவாய்க்கொண்டு கூட அன்வயிக்குமவன். இங்கு ஸப்ரகார ப்ரும்மமாகிற போக்யத்திலே ப்ரும்மமும் முக்தனும் கூட போக்தாக்களாய் அன்வயிக்கையாலே முக்தனை ஸயுக் என்கிறது. 'ஸாதர்ம்யம் ஹி ஸாயுஜ்யம் வதந்தி ப்ரஹ்மவாதிந:' (ஸாயுஜ்ய மென்ருல் ஸமான ரஸத்தை அனுபவித்தல் என்று ப்ரும்மவாதிகள் சொல்லுகிருர்கள்) என்று சாகடாயனர் சொல்லுகிருர். ஸாயுஜ்ய சப்தத்திற்கு ஸ்ரீசங்கரர் முதலானவர்கள் சொல்லுகிருப்போல் ஐக்கியம் அர்த்தம் சொல்லக்கூடாது. அப்படி

ஐக்கியம் அர்த்தம் சொன்னால் வ்யாகரண சாஸ்திரத்திற்கும், சப்த சக்திக்கும் பேத ச்ருதிகளுக்கும் விரோதம் வரும். முக்தன் பரமஸாம்யத்தை யடைகிறான் என்று ச்ருதி சொல்லுகிறதே யல்லாமல் ப்ரும்மத்தோடு ஐக்ய மாகிறான், ஒன்றாய்ப்போய் விடுகிறான், என்று சொல்லவில்லை. பகவானும் கீதையில் '[illegible]' (என்னோடு ஒப்புமை யடைந்தார்கள் – எனக்கு ஸமான தர்மத்தை யடைந்தார்கள்) என்று சொன்னாரே தவிர என்னுடன் ஐக்யம் அடைந்தார்கள் என்று சொல்லவில்லை. ஆகையால் ஸாயுஜ்ய சப்தத்திற்கு ஐக்யம் அர்த்தமல்ல.

## முடிவுரை.

ஸமஸ்த வேதாந்தங்களிலும் ப்ரதிபாதிக்கப்பட்ட இவ்விதம் தத்வஹித புருஷார்த்தங்கள் நிரூபிக்கப்பட்டன. சிதசித் விசிஷ்டனான ஸ்ரீமந் நாராயணன் தான் அத்வைதமான தத்வம்; பக்திப்ரபத்திகள் ஹிதங்கள், அதாவது அவனையடைய உபாயங்கள், அப்ராக்ருத லோகத்தில் அவனுக்கு நித்யகைங்கர்யம் செய்து கொண்டு அவனை அநுபவிப்பதுதான் புருஷார்த்தம். இங்குசொன்ன அர்த்தங்களெல்லாம் இப்படி ஒரு ச்லோகத்தால் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன:—

[illegible]

என்று.

“[illegible]”

186726

## கார்யதர்சியின் விளம்பரங்கள்.

### ஸ்ரீவண்சடகோப ஆதிவண்சடகோப மஹாதேசிகன் ஸம்மானம்.

(ராவ்ஸாஹிப் T. S. ஸ்ரீநிவாஸ ராகவாசாரியார் ஸ்வாமியின் பண்டு.)

ஷை ஸம்மாநத்தின் பொருட்டு நிகழ்ந்த ஸம்வத்ஸரத்தில் அழைக்கப்பட்ட லக்ஷ்மீதத்வத்தைப்பற்றிய வ்யாஸங்களில் முதன்மையானதாக ஸபாபண்டிதர்களால் தீர்மானிக்கப்பட்டது ஸ்ரீ. உ. வெ காடந்தேத்தி கோபாலாசார்யர் ஸ்வாமியுடையது. ஷை தீர்மானத்தை அநுஸரித்து நிர்வாஹ ஸபையார் இந்த ஸ்வாமிக்கு ஷை ஸம்மாநம் ரூ. 15 ஐயும் ஸமர்ப்பித்தார்கள்.

### விளம்பரம் 2.

திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும் போலீஸ் அஸிஸ்டண்டு ப்ராஸிக்யூடர், ஸ்ரீ. உப. T. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, சிகை வைத்துக்கொள்ளுதல், யஜ்ஞோபவீதம் தரித்தல், ஸந்த்யாவந்தனம் செய்தல், இவைகளின் ஸ்வரூபம், உபபத்தி (rational) ஆவச்யகதை, ஐஹிகஆமுஷ்மிகபலம் இவைகளை ஸ்பஷ்டமாய் ப்ரமாண பூர்வகமாய் எளிதான தமிழில் எழுதும் முதல் தரமான வியாஸத்துக்கு இனும் 15 ரூபாய் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார். இதை எழுத விருப்பமுள்ளவர்கள் வியாஸத்தை எழுதி ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சிக்கு வைகாசிமீ 1உக்குள் அநுப்பவேண்டியது. அதுகள் ஸபையின் பண்டிதர்களால் பரிசோதிக்கப்பட்டு முதல்தரமான வியாஸம் என்று நிர்ணயிக்கப்பட்ட வியாஸம் எழுதினவருக்கு அந்த இனும் அநுப்பப்படும். வியாஸம் எழுதுகிறவர்கள், தங்கள் ஆசார்யனிடமிருந்தோ, அல்லது தங்கள் ஸமீபத்தில் வஸிக்கும் பெரியோர்களிடமிருந்தோ, ‘வேறொருவருடைய உதவியின்றியே இவரால் இந்த வியாஸம் எழுதப்பட்டது’ என்று ஒரு அத்தாக்ஷி பத்திரம் ஷை வியாஸத்துடன் அநுப்பவேண்டியது.

ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், கார்யதர்சி.

All remittancess should be sent directly to the Secretary, Sri Vaishnava Siddhanta Sabha and not to any other.

# Ready for Sale

வேதாந்ததீபிகை ஆபீஸில் கிடைக்கக்கூடிய புஸ்தகங்கள்.

1. வேதாந்த தீபிகை பழய ஸஞ்சிகைகள் வாலியூம் 1க்கு - 12 ஸஞ்சிகைகளுக்கு 3 0 0

பைண்டு வாலியூம். 3 8 0

2. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ. உப. இஞ்ஜிமேடு ரெங்கநாதாசாரியருடைய வ்யாக்யாநத்துடன். 0 4 0

3. ஸ்ரீ சதுஸ்லோகீ விவரணம். 0 4 0

4. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம். ஸ்ரீ.உப. பண்டிதபூஷணம் வித்வான் சேட்டலூர் நரஸிம்மாசாரியர் வ்யாக்யானத்துடன் 6 8 0

5. ஜநகநந்தினி—ஸ்ரீ. உ. ப. தி. தி. ரங்காசார்யரால் செய்யப்பட்டது. 1 0 0

6. மும்மணிக்கோவை—ஸ்ரீ. உ. ப. பண்டிதபூஷணம் வித்வான் சேட்டலூர் நரஸிம்மாசார்யர் வ்யாக்யானத்துடன் 0 8 0

7. கற்புநிலை (பாதிவ்ரத்யம்) ஸ்ரீ. உப. வித்யாநிதி க்ருஷ்ணமாசார்யரால் செய்யப்பட்டது. 0 2 0

8. விவர்ஹரஹஸ்யம்—ஸ்ரீ. உப. வித்யாநிதி க்ருஷ்ணமாசாரியாரால் செய்யப்பட்டது. 0 4 0

[ஸம்ஸ்க்ருத புஸ்தகங்கள் தேவநாகர எழுத்தில்.]

9. ந்யாயபரிசுத்தி. 3 0 0

10. கத்யத்ரயம், ஸ்ரீதேசிகன் பாஷ்யத்துடன். 1 0 0

இவைகளை கீழ் குறிக்கப்பட்டுள்ள விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

The Secretary,
Sri Vaishnava Siddhanta Sabha,
2/11, Adiappa Mudaly Street, Purasawalkam,
Vepery Post, (MADRAS. N. C.)